பக்கங்கள் : பதினாறு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 சித்திரை 21 திங்கட்கிழமை (04.05.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 137

[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

## ஊரடங்கு இன்று தளர்கிறது

(கொழும்பு)
கடந்த வியாழக்கிழமை இரவு 8.00 மணி முதல் யாழ்ப்பாணம் உட்பட 21 மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஊரடங்கு சட்டம் இன்று 15

## செட்டிகுளம் பிரதேச சபையில் கடமையாற்றும் இளம் யுவதி



### கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு

(வவுனியா)
வவுனியா, செட்டிகுளம் பிரதேச சபையில் கடமையாற்றும் இளம் யுவதி ஒருவர் கிணறு ஒன்றில் விழுந்து 15

## காணாமல்போன மாணவன் 6 நாட்களின் பின்னர்


### கடல்நீரேரியில் சடலமாக மீட்பு



(பளை)
பளை, தர்மக்கேணி அ.த.க பாடசாலையில் கல்வி பயிலும் 15

# திட்டமிட்ட திகதியில் தேர்தலை நடத்துக

## தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் ஜனாதிபதி கோட்டா கோரிக்கை



*(கொழும்பு)* பாராளுமன்றத் தேர்தலை திட்டமிட்ட திகதியில் தேர்தல்கள் ஆணைக்குழு நடத்த வேண்டும். தேர்தலைக் குழப்பியடிக்கும் வகையில் யாராவது வழக்குத் தொடுத்தால் அதற்குரிய பதிலை நீதிமன்றத்துக்கு நான் வழங்குவேன் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். *(15ஆம் பக்கம் பார்க்க)*

## கொரோனா 718 ஆக உயர்வு

(கொழும்பு)
கொரோனா வைரஸ் (Covid-19) தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 16 பேர் நேற்று ஞாயிற்றுக்கிழமை அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார 15

## முல்லை இளைஞன் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு



(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை 15

### நீதிமன்றம் செல்வது உறுதி

## மகிந்தவின் தாளத்துக்கு ஆட எம்மால் முடியாது

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)
ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் இணைந்து பிரதமர் மகிந்த ராஜபக்ஷ போடும் ஆட்டத்துக்கு எம்மால் ஆடவே முடியாது. அதுதான் 15

### - ஊரடங்கு நடைமுறையில் உள்ள வேளை -

## மிருசுவில் மன்னன்குறிச்சி பகுதியில் குடும்பஸ்தர் வெட்டிப் படுகொலை

(சாவகச்சேரி)
மிருசுவில் - மன்னன்குறிச்சி பகுதியில் நேற்று இரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில் குடும்பஸ்தர் ஒருவர் பலியானதுடன் மேலும் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.
மிருசுவில் பகுதியில் இரு தரப்பினருக்கு இடையில் இடம்பெற்ற மோதல் வாள்வெட்டில் முடிந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. 15

### அடையாள அட்டை இறுதி இலக்க பொறிமுறை

## ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களுக்கு மட்டுமே பொருந்தும்

### தளர்த்தப்படும் இடங்களுக்குப் பொருந்தாது

(கொழும்பு)
'ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களில் மட்டுமே தேசிய அடையாள அட்டையின் இறுதி இலக்கத்தின் அடிப்படையில் அத்தியாவசிய தேவைகளுக்கு செல்வோருக்கு அனுமதியளிக்கப்படும். ஊரடங்கு தளர்த்தப்படும் இடங் 15

## நிதியை கையாளும் அதிகாரம் ஜனாதிபதி கோட்டாவுக்கு உண்டு

### பிரதமர் மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)
இலங்கை அரசியலமைப்பின் 150 (3) வது பிரிவின் கீழ் பாராளுமன்றத்தால் நிதி ஒதுக்கப்படாத எந்த நோக்கத்திற்காகவும் நிதியை ஒதுக்க ஜனாதிபதிக்கு முழு அதிகாரம் இருப்பதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ 15

## பொதுத் தேர்தலை நடத்தவே அலரி மாளிகையில் கூட்டம்

### மகிந்த ராஜபக்ஷ திட்டவட்டம்

(கொழும்பு)
பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுடனான கூட்டம் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்குத் திட்டமிட்டபடி அலரி மாளிகையின் பிரதான மண்டபத்தில் நடைபெறும்.
எனது அழைப்புக் 15

### மகிந்தவின் அழைப்பை

## ஐ.தே.கவும் நிராகரிப்பு

### கூட்டமைப்பு பங்கேற்கும்

(கொழும்பு)
பிரதமர் மகிந்த 15

### வங்கிகளில் பெறப்பட்ட கடன்களுக்கான

## சலுகைகளை பெறும் காலம் மே 15 வரை நீடிப்பு

(கொழும்பு)
வங்கிகளில் பெறப்பட்ட கடன்களில் சலுகைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் 5 லட்சம் ரூபாயுக்கு உட்பட்ட காசோலைகளின் செல்லுபடிக் காலத்தை நீடிப்பதற்குமான சலுகைக் காலம் மே 15ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. 09

### சந்தைப்படுத்த முடியாத விவசாயிகள்

# கமநலத் திணைக்களத்தினை தொடர்பு கொள்க - அரச அதிபர்



(யாழ்ப்பாணம்)

ஊரடங்கு உத்தரவு காரணமாக தமது உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்த முடியாது தவிக்கும் விவசாயிகள் கமநலத் திணைக்களத்தினை தொடர்பு கொள்ளுமாறு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.

நிலவும் கொரோனா தொற்று அச்சம் காரணமாக நாட்டில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக விவசாயிகள் உற்பத்திப் பொருட்களை உரிய நேரத்தில் சந்தைப்படுத்த முடியாது நட்டத்தினை எதிர்நோக்கி வருகின்றனர்.

சந்தைப்படுத்த முடியாதுள்ள உற்பத்தி பொருட்களை கமநலத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு வழங்கி வைக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-3,8)

### 65 வயதுக்கு மேற்பட்ட

# கைதிகளை விடுதலை செய்யத் தீர்மானம்

(கொழும்பு)

குற்றக்கோவை தண்டனைச்சட்டத் திற்குட்பட்ட 33 குற்றச் செயல்களுக்கு புறம்பான குற்றச் செயல்கள் தொடர்பில் தண்டனை அனுபவித்து வரும்65 வயதுக்கு மேற்பட்ட கைதிகளை விடுதலைச் செய்வதற்கு சிறைச்சாலைகள் திணைக்களம் தீர்மானம் எடுத்துள்ளது.

எதிர்வரும் வியாழக்கிழமை 7 ஆம் திகதி வெசக் போயா தினத்தன்று இந்த கைதிகளை விடுதலை செய்ய இருப்பதாக சிறைச்சாலை ஆணையாளர் எம்.ஜி.டபிள்யூ. தென்னகோன் தெரிவித்தார்.

இதைத்தவிர பிணை செலுத்த முடியாமல் இருக்கும் சிறு குற்றங்களை புரிந்த கைதிகளையும் விடுதலை செய்ய இருப்பதுடன் இன்னும் சில கைதிகளுக்கு மன்னிப்புக் காலம் வழங்குவதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ம-3)

### ஊர்காவற்றுறையில் வாள்வெட்டுக்கிலக்காகி

# கை துண்டாகும் நிலையில் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்தீவகம் ஊர்காவற்றுறை பிரதேசத்திற்கு உட்பட்ட சின்னமடு பகுதியில் வாள் வெட்டுக்கு இலக்காகி கை துண்டாகும் நிலையில் நபர் ஒருவர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவம் நேற்றுக் காலை 10 மணியளவில் ஊர் காவற்றுறை சின்னமடுப் பகுதியில் இடம் பெற்றுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இரு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதல் வாள் வெட்டு வரை சென்றுள்ளதாகவும் கூறப்படுகின்றது. இதன் போது 31 வயதுடைய ஒருவரது கை துண்டாகும் வகையில் வாள் வெட்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. நேற்று முன்தினம் அங்கு ஏற்பட்ட சிறு தகராறு நேற்று குழு மோதலாக மாறியுள்ளது.

இதன் போது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் வாள் வெட்டுக்கு இலக்கானவர் ஆபத்தான நிலையில் ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ள நிலையில் சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-3)


# கண்ணீர் அஞ்சலி

எமது மண்ணுக்கேயுரித்தான வித்துவபாரம்பரியத்தின்
கற்பகதருவொன்று காலத்தை வென்றது. மும்மொழிச்சாகரம்,
மூதறிஞர், தத்துவவிற்பன்னர்

அமரர் **ஆ. சபாரத்தினம்**

(மேனாள் வருகைதரு விரிவுரையாளர்
சைவசித்தாந்த முதுகலைமாணிக் கற்கைநெறி )



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

**இந்துக்கற்கைகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி




அமரர் **சின்னத்தம்பி கிருஷ்ணபிள்ளை**

(ஓய்வு நிலை வானிலை அவதானி வளிமண்டலத்திணைக்களம்,
பிரபல சோதிடர்)

திதி - சித்திரை மாத பூர்வபக்க ஏகாதசி

வேர்களிலிருந்து கசியும் நீராய்
அப்பாவின் நினைவுகள் எமக்குள்
இட்டு நிரப்ப முடியா இடைவெளியில்
உம் உற்பவங்கள் விரிந்து செல்கின்றன
'எல்லாமாய்' எமக்கிருந்தீர்
என்றும் அவன் அடியிருப்பீர்

(C-9554)

**"கிருஷ்ணவாசா"**
**கரவெட்டி மேற்கு, கரவெட்டி.**

**- குடும்பத்தினர்**
**021 226 1312**

# மரண அறிவித்தல்



## அரியகுட்டி சண்முகநாதன்

இணுவில் மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அரியகுட்டி சண்முகநாதன் 03.05.2020 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னப்பு - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற லீலாவதியின் அன்புக் கணவரும், தெய்வநாயகி, கௌசலாதேவி, முருகையா, மணிவண்ணன், புஸ்பலதா ஆகியோரின் அன்பு தந்தையாரும், அருமைரத்தினம், பாலகுமார், சுதர்சினி, கீதா, நிமலராசா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான வள்ளிப்பிள்ளை, மாணிக்கம் மற்றும் சிந்தாமணி, நாகேஸ்வரி, தியாகராசா, காலஞ்சென்றவர்களான கனகரட்ணம், இராசேந்திரம் மற்றும் பூபாலசிங்கம் ஆகியோரின் அன்பு சகோதரனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா, கந்தையா, இராசையா, இரத்தினம் மற்றும் கமலாம்பிகை, இராஜேஸ்வரி, திருமகள், செல்லபாக்கியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2020) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இணுவில் மேற்கு.** (C-9558) **தகவல் : குடும்பத்தினர்**

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

# பொதுத் தேர்தல் தொடர்பாக இன்னும் இரண்டு வாரங்களில் இறுதி முடிவு

## மகிந்தானந்த தெரிவிப்பு



(கொழும்பு)

பொதுத் தேர்தல் தொடர்பாக இன்னும் இரண்டு வாரங்களில் இறுதி முடிவொன்று எடுக்கப்படும் என முன்னாள் இராஜாங்க அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய, நேற்று முன்தினம் சனிக்கிழமை கட்சிகளின் முக்கியஸ்தர்களுடன் பொதுத் தேர்தல் தொடர்பாக விசேடமாக கலந்துரையாடினார்.

தேர்தல்கள் செயலகத்தில் இடம்பெற்ற இந்தப் பேச்சுவார்த்தையை அடுத்து, ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"பொதுத் தேர்தலை அவசரப்பட்டு நடத்த வேண்டிய தேவை கிடையாது என்பது தான் பெரும்பாலான கட்சிகளின் வேண்டு கோளாக இருந்தது.

எனினும், தேர்தலை நடத்துவது என்பது மக்களின் ஜனநாயக உரிமையாகும். தேர்தல்கள் ஆணைக்குழு இதுதொடர்பாக உடனடியாக முடிவெடுக்க முடியாது எனத் தெரிவித்தது. நாட்டில் நிலவும் நிலைமைகளைக் கருத்தில் கொண்டு, இன்னும் இரண்டு வாரங்களில் இதுகுறித்து முடிவு எடுப்போம் என தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்தது.

இறுதித் தீர்மானத்தை இன்னும் எடுக்கவில்லை" என மகிந்தானந்த மேலும் தெரிவித்தார். (இ-7)

# சிறையை உடைத்து தப்பிக்கும் கைதிகளின் முயற்சி தோல்வி

## அதிகாரிகளுடன் மோதல்; ஒருவர் பலி



(கொழும்பு)

மகர சிறையில் தப்பிச் செல்வதற்காக சிறையை உடைக்கும் ஏழு கைதிகளின் முயற்சி தோல்வியடைந்தது.

இதேவேளை தப்பிக்க முயன்ற 38 வயது கைதி ஒருவர் சுவரிலிருந்து விழுந்து உயிரிழந்தார் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை, ஏழு கைதிகள் இரண்டு சிறை அதிகாரிகளுடன் மோதலில் ஈடுபட்டனர். இதன் போது நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்காக சிறை அதி காரி ஒருவர் துப்பாக்கிச்சூடு நடத்தினார்.

இதன்போது சிறைச்சாலை சுவருக்கு மேல் கயிற்றைப் பயன்படுத்தி தப்பிக்க முயன்ற கைதிகளில் ஒருவர் கீழே விழுந்து பலத்த காயம் அடைந்தார்.

குறித்த கைதி ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் 02 சிறைக் காவலர்கள் காயமடைந்துள்ளதாகவும் அவர்கள் ராகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதாகவும் மேலதிக விசாரணைகள் இடம்பெறுவதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஜாலிய சேனாரட்ன தெரிவித்தார். (இ-7)

# உயர்தரப் பரீட்சையை நடத்துவது குறித்து இரண்டு வகைத் திட்டங்கள் பரிசீலனை

## பிரதமர் மகிந்த தகவல்

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சையை நடத்துவது தொடர்பாக இரண்டு வகையான திட்டங்களை பரிசீலித்து வருவதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

யுனிசெப் நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறுவர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் பாடசாலைகளை விரைவில் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

பாடசாலைகள் திறக்கப்படும் போது முதலாம் தவணைப் பரீட்சைகள் நடத்தப்படமாட்டாது எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், நடத்தப்பட்ட பாடத்திட்டங்களின் அடிப்படையில் இரண்டாம் தவணைப் பரீட்சை நடத்தப்படும் எனவும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, உயர்தரப் பரீட்சைகளை நடத்துவது தொடர்பாக இரண்டு வகையான திட்டங்களை பரிசீலித்து வருவதாகவும் பிரதமர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார். இதற்கமைய, உயர்தரப் பரீட்சைகளை ஒத்திவைப்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். அல்லது பாடத்திட்டத்தின் அடிப்படையில் உயர்தரப் பரீட்சையை நடத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார். அத்துடன், இதுகுறித்த இறுதி முடிவு குறித்து கல்வி அமைச்சு விரைவில் அறிவிக்கும் எனவும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார். (ஐ-2-4)


01ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
திருமதி. ரவிக்குமார் சுதா
பிறப்பு: 1976.12.19 இறப்பு: 2019.04.16

எதிர்கால வாழ்வில்
உம் மழலைகளை
சிகரம் ஏற்றும் நினைவுகளுடன்
சுமைகளைத் தாங்கி நின்றீர்
இடியென காலன் வருவான் என்று
கனவுகூட காணவில்லையே நாம்
ஆண்டவனடியில் நீர் இளைப்பாறுவீர்
என்ற நம்பிக்கையுடன்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஞானவைரவர் வீதி,
வழாலை தெற்கு,
மயிலங்காடு.
(2653)
குடும்பத்தினர்
077 939 2541

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
நடராசா
இராசலிங்கம்
பிறப்பு 1955.04.14 இறப்பு 2019.04.16



கணப் பொழுதும் எண்ணவில்லை
எம் கலங்கரை விளக்கே
நீங்கள் இமைப்பொழுதில்
எம்மை விட்டகல்வாயென
பார்க்குமிடமெங்கும்
உங்கள் குரலே கேட்கிறது
பார்த்து நடந்துவர
உங்கள் பாசம் தெரிகிறது
ஓடி உருண்டது
உமைப்பிரிந்து ஓராண்டு
வாடிவதங்குகின்றோம்
உமைப்பிரிந்து எண்ணிநிதம்
எம் மனமாறாத் துயரோடு
உம் நினைவோடு
விழியோடு நீரோடு
வழிகடந்து செல்கின்றோம்.

கோணாவளை,
வயாவிளான்.
(5406)
குடும்பத்தினர்
077 343 7218

கண்ணீர் அஞ்சலி



பிறப்பு: 06.03.1946 இறப்பு: 29.04.2020

எமது பாடசாலை ஆசிரியர்
திரு. செ.பதிஸ்ராஜா அவர்களின்
அன்புத் தாயார்
திருமதி செ.புவனேஸ்வரி
அவர்கள் இறைபதம் எய்தியுள்ளார்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திப்பதுடன் அவரின்
குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவித்துக்
கொள்கின்றோம்.

(2679)
பாடசாலை சமூகம்,
யா/உயரப்புலம் மெதடிஸ் மிசன் வித்தியாலயம்.

# உலகளவில் 35 இலட்சத்தை நெருங்கியது

# கொரோனா தொற்றாளர்கள் எண்ணிக்கை

## செய்வதறியாது திகைத்து நிற்கும் உலக நாடுகள்

(ஜெனிவா)

கொரோனாவின் கோரப்பிடியில் சிக்கி, உலகளவில் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 34 இலட்சத்து 81 ஆயிரத்தைத் தாண்டியது. அதேபோன்று பலியானோரின் எண்ணிக்கை 2 இலட்சத்து 45 ஆயிரத்தைக் கடந்தது. நோயிலிருந்து விடுபட்டவர்களின் எண்ணிக்கை 11 இலட்சத்து 701 ஆகவும் பதிவானது.

மேலும், வைத்தியசாலையிலிருந்து சிகிச்சை பெற்றுவருவோரின் எண்ணிக்கை 21 இலட்சத்து 30 ஆயிரமாக உயர்ந்தது. அவர்களில் 50 ஆயிரத்து 864 பேரின் உடல்நிலை சற்று மோசமாகவுள்ளது.

இந்நிலையில், அமெரிக்காவில் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 11 இலட்சத்து 60 ஆயிரத்து 185 - பலியானோரின் எண்ணிக்கை 67 ஆயிரத்து 410, ஸ்பெயினில் பாதிப்பு எண்ணிக்கை 2 இலட்சத்து 45 ஆயிரத்து 567 - பலியானோரின் எண்ணிக்கை 25 ஆயிரத்து 100, இத்தாலியில் பாதிப்பு எண்ணிக்கை 2 இலட்சத்து 9 ஆயிரத்து 328 - பலியானோரின் எண்ணிக்கை 28 ஆயிரத்து 710, பிரித்தானியாவில் பாதிப்பு எண்ணிக்கை 1 இலட்சத்து 82 ஆயிரத்து 260 - பலியானோரின் எண்ணிக்கை 28 ஆயிரத்து 131, பிரான்ஸில் பாதிப்பு எண்ணிக்கை 1 இலட்சத்து 68 ஆயிரத்து 386 - பலியானோரின் எண்ணிக்கை 24 ஆயிரத்து 760, பிரேசிலில் பாதிப்பு எண்ணிக்கை 96 ஆயிரத்து 559 - பலியானோர் எண்ணிக்கை 6 ஆயிரத்து 750, ஜேர்மனியில் பாதிப்பு எண்ணிக்கை 1 இலட்சத்து 64 ஆயிரத்து 967 - பலியானோர் எண்ணிக்கை 6 ஆயிரத்து 812, இந்தியாவில் பாதிப்பு எண்ணிக்கை 37 ஆயிரத்து 776 - பலியானோர் எண்ணிக்கை ஆயிரத்து 223 ஆக உள்ளது. (இ-7)

## கடலுக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளான பேருந்து கடும் போராட்டத்தின் பின் மீட்பு





(யாழ்ப்பாணம்)

காரைநகர்- யாழ்ப்பாணம் வழித்தடத்தில் சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்து சபையின் காரைநகர் சாலைக்குச் சொந்தமான பேருந்து பொன்னாலைப் பாலத்திற்கருகில் கடலுக்குள் பாய்ந்து கடந்த 30 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் விபத்துக்குள்ளானது.

கடும் சேதங்களுக்குள்ளான குறித்த பேருந்தை வடக்கு கடற்படைக் கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் கபில சமரவீரவின் உத்தரவின் பேரில் காரைநகர் கடற்படையினர் கிரேன் உள்ளிட்ட கனரக இயந்திரங்களின் உதவியுடன் கடந்த வெள்ளிக்கிழமை கடுமையாகப் போராடி மீட்டனர். மீட்கப்பட்ட குறித்த பேருந்து கடற்படையினரின் கனரக வாகனத்தில் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. (இ-18)

## கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 11 இலட்சத்தைத் தாண்டியது!




(ஜெனிவா)

உலகம் முழுவதிலும் கொரோனா வைரஸ் தொற்று பரவியவர்களில் 11 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் குணமடைந்தனர்.சீனாவின் ஹூபேய் மாகாணம் வுஹான் நகரில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தற்போது உலகின் 210 நாடுகளுக்குப் பரவியது.

கொரோனாவின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் இந்த வைரஸுக்கு தடுப்பு மருந்து கண்டுபிடிக்க விஞ்ஞானிகள் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

தடுப்பு மருந்துகள் கண்டுபிடிக்கும் முயற்சிகள் ஒரு பக்கம் நடைபெற்று வந்தாலும் மருத்துவத்துறையினரின் தன்னலமற்ற சேவையால் வைரஸ் பாதிப்பிலிருந்து பலர் மீண்டு வந்த வண்ணமுள்ளனர். இந்நிலையில், கொரோனா வைரஸ் பாதிப்பிலிருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 11 இலட்சத்தைத் தாண்டியது.

நேற்றுக்காலை 9 மணி நிலவரப்படி, உலகம் முழுவதும் 34 இலட்சத்து 63 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

சிகிச்சை பெறுபவர்களில் 50 ஆயிரத்துக்கும் அதிகமானோரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. கொரோனாவுக்கு இதுவரை 2 இலட்சத்து 45 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## போக்குவரத்து வசதிகளை வழங்க புதிய திட்டங்கள்

(கொழும்பு)

அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்காக போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கு இலங்கை போக்குவரத்து சபை புதிய திட்டங்களை வகுத்துள்ளது.

இதற்கமைவாக அந்தந்த நிறுவனாங்களுக்கு தனித்தனியாக பஸ்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள முடியும் என்று இலங்கை போக்குவரத்துச் சபை அறிவித்துள்ளது.

இதேவேளை, இன்று 4 ஆம் திகதியிலிருந்து அத்தியாவசிய சேவைகளுக்காக வரும் பணியாளர்களுக்காக புகையிரத சேவைகள் இடம்பெறவுள்ளதாக புகையிரதத் திணைக்களம் அறிவித்துள்ளது.

எவ்வாறாயினும் அந்த சேவையாளர்கள் குறித்த நிறுவன பிரதானியிடமிருந்து கோரிக்கைக் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டிருந்தால் மாத்திரமே புகையிரதத்தில் பயணிக்க அனுமதிக்கப்படுவர் என திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

புகையிரதங்களில் பயணிப்பதற்கான அனுமதி வழங்கப்படும் நபர்களுக்கு SMS மூலம் அறிவிக்கப்பட்டும். புகையிரதங்களில் பயணிப்பதற்காக இந்த SMS தகவலை பாதுகாப்புப் பிரிவினரிடம் காட்சிப்படுத்த வேண்டும் என்று ரயில் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

## கடைகளுக்கான வாடகை, குத்தகைக்கு விசேட கழிவு வழங்கப்படல் வேண்டும்

(சாவகச்சேரி)

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக சகலரது வியாபார நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டிருப்பதனால் சாவகச்சேரி நகர சபையினர் தமது கடைகளுக்கான வாடகை மற்றும் சந்தைக் குத்தகை ஆகியவற்றுக்கு விசேட கழிவு வழங்க வேண்டும் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ம.நடனதேவன் கோரிக்கை விடுத்தார்.

அண்மையில் இடம் பெற்ற சாவகச்சேரி நகரசபையின் மாதாந்த அமர்வின் போதே அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது இரண்டு மாத காலமாக வர்த்தகர்கள் மற்றும் வியாபாரிகள் தொழிலை இழந்து வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இந் நிலைமை மேலும் சில மாதங்களுக்குத் தொடரக்கூடும்.

ஆகவே சாவகச்சேரி நகர சபையினர் இவ் இக்கட்டான சூழ்நிலையில் தமது கடைகளுக்கான வாடகைகளைப் பெறுவது பொருத்தமற்றது. அத்துடன் சாவகச்சேரி பொதுச் சந்தையைக் குத்தகைக்கு பெற்றவரும் பாதிக்கப்பட்டுள்ளார்.

எனவே இது தொடர்பில் சாவகச்சேரி நகரசபை கலந்தாலோசித்து 3 - 6 மாத காலத்திற்கு வாடகைகளைப் பெறாது சலுகை வழங்க வேண்டும் என மேலும் அவர் தெரிவித்தார்.

உறுப்பினரின் இக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட தவிசாளர் மற்றும் செயலாளர் ஆகியோர் இவ் இக்கட்டான சூழலில் தாம் வர்த்தகர்களிடத்து வர்டகை அறவிடவில்லை எனவும் நிச்சயமாக குறிப்பிட்ட காலத்திற்கு வாடகை அறவீட்டில் விசேட சலுகை வழங்கப்படும் எனவும் உறுதியளித்தனர். (இ-30)

## சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள்

**யாழ்.சுன்னாகம் இராமநாதன் மகளிர் கல்லூரி**

பி.கலைப்பிரியா - 9ஏ, எஸ்.நிக்சனா - 8ஏபி, எஸ்.லவன்யா - 8ஏபி, வி.சுயானி - 8ஏசி, ரி.காவியா - 7ஏ2பி, எஸ்.மைவிழி - 7ஏபிசி, ஆர்.ரம்யா - 7ஏ2பி.

**யாழ்.சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி**

ஆர்.பிரதாபன் - 9ஏ, ரி.சாருஜா - 9ஏ, பி.சுபானுஜன் - 7ஏபிசி.

**யாழ்.காரைநகர் இந்துக் கல்லூரி**

வி.கஜேந்தினி - 8ஏபி.

# விண்ணக வாழ்வின் 31ம் நாள் நினைவு



மண்ணில் 10 - 02 - 1955

விண்ணில் 03 - 04 - 2020

## அமரர் அரியதாஸ் மேரி றெஜினா (அன்னக்கிளி)

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே
என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" யோவா 11:25

அம்மா நீ இல்லா மனை
வாழ்விழந்து நிற்கின்றது
எம் வாழ்வில் எப்போதும் அருகிருந்தாய்
உன் அருகில் நாம் இல்லையே
என்ற ஏக்கம் எம்மை வாட்டுகின்றது
உன்னை நினைத்து தினம் தினம்
நாம் ஏங்கித் தவிக்கின்றோம்
அம்மா காலங்கள் கடந்தாலும் – உன்னை
எம் உள்ளத்தில் என்றும் தாங்கி நிற்போம்
இறைவன் சந்நிதியில் நித்தியத்திற்கும்
இளைப்பாற செபிக்கின்றோம்

எமது அம்மாவின் இறுதிப் பயணச் சடங்கில் கலந்து எம்மோடு உடனிருந்து ஆறுதல் கூறி பல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவரையும் நன்றியோடு நினைக்கின்றோம்.

பொற்பதி,
குடத்தனை.

தகவல்:
குடும்பத்தினர்

# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## அமரர். செல்லத்துரை சின்னையா



கடந்த மாதம் 02.04.2020 வியாழக்கிழமை காலை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் திரு.செல்லத்துரை சின்னையா அவர்களின் 31 ஆம் நாள் நினைவு தினம் 02.05.2020 சனிக்கிழமையன்று நடைபெற்றது. அன்னாரின் மரண நிகழ்வுகளின் பொழுது இக்கட்டான சூழ்நிலைகளிலும் பல வழிகளிலும் உதவிகள் புரிந்தவர்கட்கும், நேரில் வந்து ஆறுதல் அளித்தவர்கட்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி.

குருந்தடிப்பிள்ளையார் கோவிலடி,
சுதுமலை- தெற்கு, மானிப்பாய்.

மனைவி (சி.சந்திராதேவி), பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

[2672]

# 31ம் நாள் நினைவஞ்சலி

## அமரர். திருமதி.தங்கராஜன் சுககன்னியா



பிறப்பு 06.04.1950

இறப்பு 06.04.2020

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கராஜன் சுககன்னியா அவர்கள் கடந்த 06.04.2020 அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நடைபெற்று பூதவுடல் அரியாலை சித்துபாத்தி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

அன்னார் பொன்னையா தங்கராஜன் (ஓய்வு பெற்ற பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியும், அநுகரன் (பொறியியலாளர்- ஜேர்மன்), சுபாகரன் (பொறியியலாளர்- அவுஸ்திரேலியா), கிருபா (தொழில் திணைக்களம்- திருகோணமலை), கருணா (மட்டக்களப்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், யாகு (ஜேர்மன்), சுதாயினி (அவுஸ்திரேலியா), சிவபாலன் (புள்ளிவிபரவியல் திணைக்களம்- திருகோணமலை), யூதா (மட்டக்களப்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும், துஜன்,துஷானா (ஜேர்மன்), பவின், சஜின் (அவுஸ்திரேலியா), கேருஷன், சாருஜன் (விவேகானந்தா கல்லூரி- திருகோணமலை), ருக்ஷன் (திருகோணமலை), அனுப்பிரியா, அனுராகவன் (மட்டக்களப்பு) ஆகியோரின் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி 06.05.2020 யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது என்பதனை தங்களுக்கு அறியத் தருவதுடன் தொலைபேசி மூலம் அனுதாபங்கள் தெரிவித்தவர்களுக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட அயலவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(சி-9551)

54, விபுலானந்தர் வீதி,
கொழும்புத்துறை.

தகவல்:- கணவர் பொ.தங்கராஜன் - 077 626 8667
மகன்மார் த.அநுகரன்-00491753258008, த.சுபாகரன் - 0061412373056,
மகள்மார் - எஸ்.கிருபா- 077 666 8667, யூ-கருணா-077 255 9725

# கொரோனா பெருந்தொற்றிலிருந்து தற்காத்துக் கொள்ளும் முறைகள்

கொரோனா பெருந்தொற்று உருவாகியுள்ள இச்சூழலில் எந்தவொரு அத்தியாவசியத் தேவைக்கும் முன் மனிதனின் சுகாதாரப் பாதுகாப்பே தவிர்க்க முடியாத முதற்தேவையாக உள்ளது. இதன் பிரதிபலிப்பு யாதெனில் உணவு உற்பத்தி, உணவு மூலப்பொருட்களை கொள்வனவு செய்தல், உணவு சமைத்தல் மற்றும் உணவுப்பரிமாறல் போன்ற நமது அன்றாட உணவுமுறைகள் யாவும் கொரோனா பெருந்தொற்றை பாதுகாப்பாக எதிர்கொள்ளும் உத்திகளை அடிப்படையாகக் கொண்டவையாக அமையவேண்டியுள்ளன. இதுபற்றிய தெளிவூட்டலை முன்வைக்கின்றது இத்தொகுப்பு!

உணவின் மூலம் COVID-19 வைரஸ் பரவுகை சாத்தியமானதா? என்ற கேள்வி முதலில் எல்லோர் மனதிலும் எழும். COVID-19 வைரஸால் பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் அசுத்தமான கைகளால் (அதாவது பாதுகாப்பாக தொற்று நீக்கம் செய்யாமை) உணவுக்குத் தேவையான மூலப்பொருட்களை உற்பத்தி செய்யும்போதும் அதனை விற்பனை நிலையத்திற்கு எடுத்துச்செல்லும் போதும் விற்பனை நிலையத்தில் அதனைக் கையாளும் போதும், உணவைத் தயாரிக்கும் போதும் மற்றும் உணவைப் பரிமாறும் போதும் வைரஸ் பரவுகை ஏற்படும் சாத்தியங்கள் நிலவுகின்றன. பாதிக்கப்பட்ட நபர் இருமும் போது அல்லது தும்மும் போது உருவாகும் திரவத்துளிகள் உணவு, உணவு பரிமாறும் பாத்திரங்கள் மற்றும் கரண்டிகள், உணவு மற்றும் உணவு தயாரிப்பதற்கு தேவையான மூலப்பொருட்களைக் காவும் வண்டிகள், உணவு வைக்கப்படும் கண்ணாடிப் பெட்டிகள், உணவுப்பொதிகள் என்பனவற்றின் மேற்பரப்பில் படும்போது வைரஸ் பரவுகைக்கான சாத்தியம் ஏற்படும்.

நமது உணவு முறைகள் எவ்வாறு அமைந்துள்ளன? எதைச்சார்ந்துள்ளன? என்பனவற்றை முழுமையாக விளங்குவது வினைத்திறனான பரவுகைக் கட்டுப்பாட்டு முறையை கட்டியெழுப்ப உதவும். உணவு உற்பத்தி முதல்நுகர்வோரின் உணவுமேசை வரை பாதுகாப்பு ரீதியிலான கரிசனை எடுப்பது இன்றியமையாததாகின்றது.

### 01. பாதுகாப்பான உற்பத்தி முறைகள்


உற்பத்தி என்பது ஒரு விரிவான செயற்பாடு ஆகும். தானியங்கள், மரக்கறிகள் பயிரிடுவது முதல் உணவுச்சேர்மானங்கள் / சுவையூட்டிகள் போன்றவற்றின் உற்பத்தி மற்றும் பெறுமதிசேர் உணவு உற்பத்திவரை குறிப்பிடலாம். இங்கு பணியாற்றுவோர் நெரிசலாவதை அல்லது அதிகம் குழுவாகப் பணிபுரிவதை இயன்றவரை குறைக்க வேண்டும். பணிபுரிபவர்களின் தனிநபர் பாதுகாப்பு அம்சங்கள் (முகக்கவசம் அணிதல், தொற்று நீக்கல் மற்றும் சமூக இடைவெளிகளைப் பேணல்) எப்போதும் உறுதி செய்யப்பட வேண்டும். அதற்கான வசதிகளை உணவு உற்பத்தி நிலையங்களும் உணவு தொழிற்சாலைகளும் ஏற்படுத்த வேண்டும்.

கையுறைகள் உணவுத்தொழிலாளர்களால் பயன்படுத்தப்படலாம். ஆனால் அவை அடிக்கடி மாற்றப்பட வேண்டும். மேலும் கையுறை மாற்றங்களுக்கு இடையில் மற்றும் கையுறைகள் அகற்றப்படும் போது கைகளைக்கழுவ வேண்டும். சவர்க்காரம் உபயோகித்து கைகழுவுதல் ஒருமுறை பாவிக்கும் கையுறைகள் (single use gloves) அணிவதை விட மிகவும் பாதுகாப்பானது.

கொரோனா தொற்று அறிகுறிகள் இருப்பவர்களை பணிக்கு உள்வாங்காது அவர்களுக்கு தேவையான மருத்துவ உதவிகளை உடனடியாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். மேலும் தொற்றுள்ளவர்களுடன் பழகியோர் மற்றும் கொரோனா தொற்று அபாயம் உள்ள பகுதிகளில் வசிப்போரை உணவு உற்பத்தி நடவடிக்கைகளுக்கு உள்வாங்குவதை தவிர்க்க வேண்டும். உற்பத்திக் கருமங்களை தேவை நிமித்தம் மாத்திரம் மேற்கொள்வது பணியாளர்களின் சுகாதாரப் பாதுகாப்பினை வலுவாக்கும். பணிபுரியும் ஊழியர்களுக்கு COVID-19 வைரஸ் பரவுவதை எவ்வாறு தடுப்பது என்பது குறித்த எழுத்துப்பூர்வ அறிவுறுத்தல்களும் பயிற்சியும் வழங்கப்பட வேண்டும். COVID-19 வைரஸ் தொற்றின் ஆரம்பகட்டங்களைக் கொண்ட தொழிலாளர்கள் நம்பகமான தகவல்களைப் பெறுவதற்கும், பணிச்சூழல்களிலிருந்து விரைவாக விடுமுறை பெறவும் தொலைபேசி அல்லது மின்னஞ்சல் மூலம் நிர்வாகத்தை தொடர்புகொள்ள ஒரு நடைமுறை நிறுவப்பட வேண்டும். நாமே நமக்குத் தேவையான மரக்கறி வகைகளை எமது வீட்டுத்தோட்டத்தில் பயிரிடுவது மற்றும் உள்ளூர் விவசாயிகளை எமக்குத் தேவையானவற்றைப் பயிரிட ஊக்குவிப்பதும் சிறந்தது.

### 02. உணவு விநியோகம் / கொண்டு சொல்லலை பாதுகாப்பாக மேற்கொள்ளல்

**உணவு எடுத்துச்செல்லும் வாகனம் மற்றும் கொள்கலன் தொடர்பான பாதுகாப்பு**



- கொள்கலன் முழுமையாக தொற்று நீக்கி சுத்தம் செய்யப்பட்டிருத்தல்.
- கொள்கலன்களை உணவை மாத்திரம் எடுத்துச் செல்ல பயன்படுத்த வேண்டும்.
- கொள்கலன்களில் பச்சையாக உண்ணும் உணவுகளை சமைக்கப்படாத இறைச்சி வகைகளுடன் எடுத்துச்செல்வதைத் தவிர்த்தல்.
- வாகனத்தை முற்றாக தொற்று நீக்க வேண்டும்.
- வாகனத்தில் உணவு ஏற்ற முன்பு உணவில் அல்லது உணவு உள்ள சிறு கொள்கலன்களில் அல்லது உணவுப் பொதிகளில் தொற்றுகை இல்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.
- வாகனத்தில் உணவுப்பொருட்கள் தவிர்ந்த தேவையற்ற மற்றைய பொருட்களை இயன்றவரை தவிர்த்தல் வேண்டும்.
- ஒருமுறை பாவிக்கக்கூடிய கொள்கலன்களை பயன்படுத்துவதன் மூலம் தொற்றான கொள்கலன்கள் மீண்டும் உணவு உற்பத்தி நிலையங்களுக்கு வருவதை தடுக்கலாம்.
- மீண்டும் பயன்படுத்தக்கூடிய கொள்கலன்களை பாவிப்பின், பொருத்தமான சுகாதார நெறிமுறைகள் செயற்படுத்தப்பட வேண்டும்.

**உணவைக்கொண்டு செல்லும்வாகன ஓட்டியின் பாதுகாப்பு**

- உணவுப்பொதிகளை எடுக்கும் போதும் விநியோகிக்கும்போதும் சமூக இடைவெளியைப் பேணல்.
- வாகன ஓட்டுநர்கள் மற்றும் பிற ஊழியர்கள் உணவு விநியோகிக்கும்போது தங்கள் வாகனங்களை விட்டு விலகிச் செல்லக்கூடாது.
- தனிநபர் தூய்மை தொடர்பாக அதிக அளவில் கரிசனை கொள்ள வேண்டும்.
- தனிநபர் பாதுகாப்பு அங்கியை அணிதல்.
- ஓட்டுநர்களுக்கு மதுசார அடிப்படையிலான கைச்சுத்திகரிப்பான்கள் மற்றும் கைதுடைக்கும் காகிதத்துண்டுகள் வழங்கப்பட வேண்டும்.
- பொருத்தமான நேரத்தில் அதாவது ஒவ்வொரு விநியோகத்தின் முன்னும் பின்னும் தொற்று நீக்கி மூலம் கைகளைத் தூய்மைப்படுத்துங்கள். இதுவே சிறந்த பாதுகாப்பு யுக்தி ஆகும். கையுறைகள் அணிவது போதுமான பாதுகாப்பைத் தருவதில்லை.
- தொடுகை மூலம் COVID-19 வைரஸ் பரவுகை ஏற்படுவது குறித்து ஓட்டுநர்கள் அறிந்திருக்க வேண்டும்.
- ஓட்டுநர்கள் அசுத்தமான மேற்பரப்பைத் தொட்டால் அல்லது அசுத்தமான கைகளால் பாதிக்கப்பட்ட நபருடன் கைகுலுக்கினால்தொற்றுநீக்கம்செய்வது அவசியமானது.
- வைரஸால் பெரும்பாலும் மாசுபடுத்தப்படும் மேற்பரப்புகள், உதாரணமாக ஸ்டீயரிங், கதவுகைப்பிடிகள், மொபைல் சாதனங்கள் போன்றன அடிக்கடி தொடும் மேற்பரப்புகள் ஆகும். எனவே இவ்வகையான மேற்பரப்புகளை அடிக்கடி தொற்றுநீக்கிகள் மூலம் சுத்தப்படுத்த வேண்டும்.
- அனைத்துப் போக்குவரத்துக் கொள்கலன்களும் சுத்தமாக வைக்கப்படுவதையும் அடிக்கடி தொற்றுநீக்கம் செய்யப்படுவதையும் உறுதிசெய்ய வேண்டும். உணவுகள் மாசுபடுவதிலிருந்து பாதுகாக்கப்படுவது தொடர்பாகவும் மாசுபடுத்தக் கூடிய பிற பொருட்களிலிருந்து பிரிக்கப்பட வேண்டும் என்பதையும் ஓட்டுநர்கள் அறிந்திருக்க வேண்டும்.

### 03. பாதுகாப்பான கொள்வனவு நடவடிக்கைகள்

வியாபார நிலையங்கள் யாவும் தொற்று நீக்கும் வசதிகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அதாவது கைதொற்று நீக்கிகள் அல்லது சவர்க்காரத்தினைப் பயன்படுத்தி கைகளைக் கழுவக்கூடிய வசதிகள் என்பவற்றை வியாபார நிலையங்களின் வாயில்களில் ஏற்படுத்த வேண்டும். பணிபுரிவோர் தனிநபர் பாதுகாப்பு அங்கிகளை அணிய வேண்டும். பொருட்கொள்வனவில் ஈடுபடுவோரின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த வேண்டும். இதற்கு வாடிக்கையாளர் ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட நேரக் கட்டுப்பாட்டை விதிக்கலாம் (உதாரணமாக நபர் ஒருவருக்கு 10 நிமிடங்கள் வீதம்). பணம் செலுத்தும் கருமபீடத்தில் சமூக இடைவெளிகளைப் பின்பற்ற வேண்டும். பணம் பரிமாறும் கருமபீடத்தை ஒளி ஊடுபுகும் தடுப்புகளால் பிரிப்பதன் மூலம் கருமபீடத்தில் வேலை செய்யும் ஊழியர்களைப் பாதுகாக்க முடியும்.

மேலும் வாடிக்கையாளர்களும் முகக்கவசம் போன்ற பாதுகாப்பு அணிகலன்கள் அணிவதை உறுதிசெய்ய வேண்டும்.

COVID-19 பற்றிய விழிப்புணர்வு அறிவுறுத்தல் பதாதைகள் மற்றும் உடல் நிலை சரியில்லாமல் அல்லது COVID-19 அறிகுறிகள் இருந்தால் வியாபார நிலையத்திற்கு நுழையவேண்டாம் என்று வாடிக்கையாளர்களைக் கோரும் அறிவுறுத்தல்கள் என்பவற்றை நுழைவாயில்களில் காட்சிப்படுத்த வேண்டும். பொருட்கள் காவும் வண்டி மற்றும் கூடைகளின் கைப்பிடிகளை சுத்தம் செய்ய வாடிக்கையாளர்களுக்கு தொற்றுநீக்கிகளை வழங்குதல் அல்லது ஒவ்வொரு பயன்பாட்டிற்கும் பிறகு கிருமி நீக்கம் செய்ய ஊழியர்களை நியமித்தல் பாதுகாப்பானதாகும். இயன்றவரை உணவுப்பொருட்களை திறந்தவெளியில் விற்பதைத் தவிர்க்க வேண்டும். மேலும் பொருட் கொள்வனவுக்காக நீண்ட தூரம் பயணிப்பதைத் தவிருங்கள். அருகில் இருக்கும் அங்காடிகளில்/ வியாபார நிலையங்களில் கொள்வனவை மேற்கொள்ளுங்கள். மேலும் சகல வியாபாரிகளும் அரசின் விலை மற்றும் தரநிர்ணய ஒழுங்குகளைப் பின்பற்ற வேண்டும்.

### 04. உணவகங்கள் மற்றும் உணவு சமைக்கும் இடங்களின் பாதுகாப்பு

உணவகம் ஒன்றில் பணிபுரியும் (உணவு தயார் செய்வோர்/ உதவியாளர் / ஏனைய பணியாளர்களும்) எந்தவொரு நபரும் கீழ்க்காணும் பாதுகாப்பு அம்சங்களை பின்பற்ற வேண்டும்

- பணியை ஆரம்பிக்கும் முன் வெப்ப நிலை பரிசோதனை
- தன்னையும் தான் பணிபுரியும் இடத்தையும் தொற்று நீக்கல்
- சுய கண்காணிப்பு - தன்னைத் தானே கொரோனா நோய் அறிகுறிகள் தொடர்பாக அறிந்துகொள்ளல்
- தனிநபர் பாதுகாப்பு அங்கி அணிதல்
- சமூக இடைவெளியைப் பேணுதல்

உணவகங்களில் (குளிர்பான நிலையங்கள், தேநீர் அருந்தகங்கள், உணவு விடுதிகள் மற்றும் விருந்தோம்பல் நிறுவனங்கள்) கொரோனா தொற்று சமூக பரவலடைய அதிக சாத்தியப்பாடுகள் உள்ளன. இவற்றை இயக்கும் போது எந்தவொரு உரிமையாளரும்/ நிறுவனமும் அரசின் சுகாதார வழிகாட்டுதல்கள் மற்றும் உலக சுகாதார அமைப்பின் பரிந்துரைகள் ஆகியவற்றை கட்டாயமாக பின்பற்றுவதோடு தமது வாடிக்கையாளர்களும் அதனடிப்படையில் நடந்து கொள்வதை உறுதி செய்ய வேண்டும்.

வாடிக்கையாளர்கள் உணவகங்களில் அதிகநேரம் செலவிடுவதை தவிர்த்தல்: இதற்கு நிகழ்நிலை (online) / தொலைபேசியூடான உணவைக்கோரும் முறையை கையாளலாம். மேலும் தொடுகையற்ற விலைப்பட்டியல் செலுத்தும் முறையை (நிகழ்நிலை அல்லது வங்கி அட்டைகள்) ஊக்குவிக்கலாம். இயன்றவரை உணவகங்களில் இருந்து உணவு எடுத்துச்செல்லும் (take away only) அடிப்படையில் அல்லது நேரடியாக உணவு விநியோக (door delivery) நடவடிக்கைகளில் இயங்குவது பாதுகாப்பானது.

(தொடரும்)

கலாநிதி பூ. ஐங்கரன்
சிரேஷ்ட விரிவுரையாளர், இராசயனவியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
சு. சிவானுஜன், ச. அனுலக்சன்
இறுதியாண்டு மாணவர்கள், இராசயனவியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# இலங்கையில் 9,660 பேர் இதுவரை தனிமைப்படுத்தல்

## 88,273 பேர் சுய தனிமைப்படுத்தலில்



(கொழும்பு)

கொரோனா வைரஸ் குடும்பத்தின் கொவிட்-19 வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் இதுவரை, 9 ஆயிரத்து 660 பேர் முப்படைகளின் கட்டுப்பாட்டிலுள்ள தனிமைப்படுத்தல் நிலையங்களில் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டதாகவும் மேலும் 88 ஆயிரத்து 273 பேர் சுயதனிமைப்படுத்தல் நடவ டிக்கைகளுக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் தேசிய புலனாய்வுத் துறையின் உதவிப் பணிப்பாளர் பராக்கிரம டி சில்வா தெரிவித்தார்.

இலங்கையில் கொவிட்-19 தொற்றாளர் அடையாளம் காணப்பட்டது முதல் நேற்று முன்தினம் காலை 9 மணி வரையிலான காலப்பகுதியில் தனிமைப்படுத்தல், சுய தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கையே அவை என அவர்கூறினார்.

சீனாவின் வுஹான் பிராந்தியத்தில் கொரோனா தொற்று பரவ ஆரம்பித்ததைத் தொடர்ந்து. அது உலக நாடுகளுக்கு பரவ ஆரம்பித்திருந்தது.

இந்நிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அறிவுறுத்தலின் பேரில் மறு சீரமைக்கப்பட்ட தேசிய புலனாய்வுத் துறையின் விசேட அலகொன்றுக்கு, குறித்த வைரஸ் தொடர்பிலான பகுப்பாய்வுகளை முன்னெடுத்து முன்னாயத்தம் செய்யும் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டன.

அதன்படியே, தேசிய புலனாய்வுத் துறையின் பிரதானி பிரிகேடியர் சுரேஷ் சலேஹ்வின் கீழ் உதவிப் பணிப்பாளர் பராக்கிரம டி சில்வாவின் நேரடிக் கட்டுப்பாட்டில் இந் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையில், இலங்கையில் தொற்றாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டவுடன் அவரது தொடர்பாடல் வலையமைப்பை கண்டறிதல், அவர்களைத் தனிமைப்படுத்தல் உள்ளிட்ட பணிகளுக்குத் தேவையான அத்தனை பின்னணி தகவல்களையும் சேகரித்து தேசிய புலனாய்வுத் துறையின் விசேட நடவடிக்கைக்குழு, சுகாதார மற்றும் பாதுகாப்புத் தரப்புக்கு உடனுக்கு உடன் உரிய இடங்களிலிருந்து வழங்கியது.

அதன் பிரகாரமே கொரோனா பரவலை வெற்றிகரமாக கட்டுக்குள் கொண்டுவர முடியுமானதாக இருந்தது என உதவிப் பணிப்பாளர் பராக்கிரம டி சில்வா சுட்டிக்காட்டினார். இந் நிலையில் இலங்கையில் கண்டறியப்பட்ட தொற்றாளர்கள் கண்டறியப்பட்ட விதம் மற்றும் தனிமைப்படுத்தல் விடயங்கள் குறித்து பராக்கிரம டி சில்வா விளக்குகையில்,

இலங்கையில் கடந்த மார்ச் மாதம் 11 ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் காலை 9 மணி வரை அடையாளம் காணப்பட்ட 700 தொற்றாளர்களில் (ஜனவரி இறுதியில் அடையாளம் காணப்பட்ட சீனப் பெண் தொற்றாளர் கணக்கில் கொள்ளப்படவில்லை), 41 பேர் வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வந்த நிலையில் நேரடியாகத் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டவர்கள்.

அத்துடன் இலங்கையில் அடையாளம்காணப்பட்ட ஏனைய தொற்றாளர்களில் 367 பேர் கொரோனா தொற்று தொடர்பில் உள்நாட்டில் பல இடங்களிலிருந்தும் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்கள். இந்நிலையில்சமூகத்தின் இடையே பொது வெளியில் அல்லது வைத்தியசாலைகளில் சிகிச்சைகளுக்குச் சென்ற நிலையில் அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்கள் 281 பேராவர்.

உண்மையில், இலங்கையில் கடந்த மார்ச் மாதம் முதல் இதுவரை 4737 பேர் வெளிநாடுகளில் இருந்து வந்த நிலையில் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டனர்.

இறுதியாக இந்தியாவிலிருந்து அழைத்துவரப்பட்ட இலங்கையர்கள் உட்பட தற்போது, 1161 பேர் வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வந்த நிலையில் தனிமைப்படுத்தல் நிலையங்களில் தங்கவைக்கப்பட்டு கண்காணிக்கப்படுகின்றனர்.

அவ்வாறு வெளிநாடுகளிலிருந்து வந்த 3576 பேர் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளை நிறைவு செய்தனர்.

இந்நிலையில், உள்நாட்டில் பல இடங்களிலிருந்து 4923 பேர் தனிமைப்படுத்தல் நிலையங்களில் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டனர். அவர்களில் 1237 பேர் உரிய தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவு செய்து வெளியேறிய நிலையில் மேலும் 3686 பேர் தொடர்ந்து அந் நிலையங்களில் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் தேசிய புலனாய்வுத்துறையின் தகவல்கள் படி, இலங்கையில் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 88 ஆயிரத்து 273 ஆகும்.

எனினும் அவர்களில் பலரும் சுய தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவு செய்த நிலையில், 28 ஆயிரத்து 746 பேர் தொடர்ந்தும் சுய தனிமைப்படுத்தல் காலத்தின் கீழ் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

இலங்கையில் புலனாய்வுத் துறை இந்த விடயத்தில்கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான ஒருவரை மையப்படுத்தி, அவரது தொடர்பாடல் வட்டத்தை தேடி, அதுசார்ந்த தனிமைப்படுத்தல், சுய தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்குத் தேவை யான தகவல்களை சுகாதாரப் பாதுகாப்புத் தரப்புக்குகளத்திலிருந்து உடனுக்கு உடன் வழங்கியதால் நாட்டில் தற்போதைய கட்டுப்பாட்டு நிலைமை சாத்தியமாகியது என மேலும் தெரிவித்தார். (இ-7)

## நகர அபிவிருத்தியை விட

# மக்களின் வாழ்வாதாரத்திற்கே முக்கியத்துவமளிக்க வேண்டும்

(சாவகச்சேரி)

தற்போது நகர அபிவிருத்தியை விட மக்களின் வாழ்வாதாரத்திற்கே முக்கியத்துவமளிக்க வேண்டும் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் க.தர்ஷன் வலியுறுத்தினார்.

அண்மையில் இடம்பெற்ற சாவகச்சேரி நகரசபையின் மாதாந்த அமர்வின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது நாட்டில் கொரோனா அச்ச நிலைமை காரணமாக மக்களின் வாழ்வாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இவ் இக்கட்டான சூழலில் புதிய அபிவிருத்தி தொடர்பாக பேசுவது பொருத்தமற்றது. சபை உறுப்பினர்கள் புதிய அபிவிருத்தி தொடர்பாக முடிவெடுப்பதை விடுத்து மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பில் சிந்திக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்:

தற்போது புதிய அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கான வருமான வழிகளும் நகரசபைக்குப் போதுமானதாக இல்லை என நகர சபையினர் சுட்டிக்காட்டினர். (இ-30)

## மாட்டிறைச்சியுடன் ஒருவர் மாட்டினார் ஒருவர் தப்பியோட்டம்



(கரணவாய்)

கரணவாய் கிழக்கில் வீட்டில் வைத்து மாடு வெட்டப்படுவதாக நெல்லியடி பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் படி குறித்த வீடு சுற்றிவளைக்கப்பட்டு சுமார் 20 கிலோ இறைச்சி பறிமுதல் செய்யப்பட்டது.

இதேவேளை ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் ஒருவர் தப்பியோடியுள்ளார். அவரைத் தேடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(இ-60)

# இராசிபலன்

04.05.2020
சித்திரை 21 திங்கட்கிழமை
துவாதசி பின்னிரவு 12.12 மணிவரை
உத்தரம் பிற்பகல் 4.28 மணிவரை
சுபநேரம் 11.56-1.26 மணிவரை
இராகுகாலம் 7.26-8.56
சந்திராஷ்டமம்-சதயம், பூரட்டாதி
அக்கினி நாள் ஆரம்பம்
வைஷ்ணவ ஏகாதசி விரதம்



மேஷம்

தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், சூழ்நிலைக்கேற்றவாறு குணத்தை மாற்றிக் கொள்வீர்கள், தேகநலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.



ரிஷபம்

அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், மனமகிழ்ச்சியோடு செயற்படும் நாள், பிறருக்கு உதவ முற்படுவீர்கள்.



மிதுனம்

தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.



கடகம்

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.



சிம்மம்

பணப்புளக்கம் அதிகரிக்கும் நாள், சுபசெய்திகள் வந்து சேரலாம், நாவன்மையால் நல்லபெயர் கிடைக்கும், வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், முயற்சிகளில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.



கன்னி

தொழில் வளர்ச்சியில் குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, விரும்பிய உணவுப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்புண்டு.



துலாம்

நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், தொழில் நலன்கருதிய பயணங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், அலைச்சல்கள் சற்று கூடும்.



விருச்சிகம்

சேமிப்பை உயர்த்தும் எண்ணம் மேலோங்கும், குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன நன்மையுண்டு.



தனுசு

குடும்ப ஒற்றுமை கூடும், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், கௌரவம், அந்தஸ்து உயரும் நாள்.



மகரம்

குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், வழிபாட்டில் கவனம் செலுத்துவீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் செய்து முடிப்பீர்கள், புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும்.



கும்பம்

வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், நிதானத்துடன் நடந்து நிம்மதி காண வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு.



மீனம்

நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், உறவினர்களின் சந்திப்பால் சிந்தை மகிழ்வீர்கள், புதிய பொருட்களின் சேர்க்கையுண்டு, களஸ்திர நன்மையுண்டு.

அமைதியாய் இரு, விரும்பியதை அடைவாய்.

# மகிந்த தலைமையிலான கூட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பங்கேற்கும்

## ஊடகப்பேச்சாளர் வீரகுமார உறுதி



(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ள அனைத்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுடனான கூட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பங்கேற்கும் எனத் தெரிவித்த அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் வீரகுமார திஸாநாயக்க, கொரோனா ஒழிப்பிற்கான அனைத்துச் செயற்பாடுகளிலும் அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க சுதந்திரக் கட்சி தயாராகவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இன்று திங்கட்கிழமை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் இடம்பெறும் அனைத்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுடனான கலந்துரையாடலில் ஜே.வி.பி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட கட்சிகள் தாம் கலந்து கொள்ளப் போவதில்லை என்று அறிவித்துள்ளன.

இந்நிலையில் இது தொடர்பில் சுதந்திரக் கட்சியின் நிலைப்பாட்டை வினவிய போதே வீரகுமார மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,


கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக நாடு பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ளது. இந்நிலையில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையிலான அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்து வருகிறது. இவ்வாறு மக்களின் நலனுக்காக அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்பு வழங்குவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தயாராகவுள்ளது.

அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய இது போன்றதொரு சந்தர்ப்பத்தில் எதிர்க்கட்சி அடிப்படையற்று செயற்படுகின்றன. எனவே அவர்களால் முன்வைக்கப்படும் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்தச் சந்தர்ப்பத்தில் பாராளுமன்றத்தைக் கூட்டுமாறு கோருவதோ ஏப்ரல் 30 ஆம் திகதிக்குப் பின்னர் அரசநிதியை ஜனாதிபதியால் செலவு செய்ய முடியாது எனக் கூறுவதையோ ஏற்றுக்கொள்ள முடியாது.

இதற்கான அதிகாரம் அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதிக்குக் காணப்படுகிறது. தற்போது பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது. அவ்வாறெனில் அரச நிதி செலவுகளை முகாமைத்துவம் செய்யாமல்இருக்கமுடியுமா?எனவே தான் அதற்கான அதிகாரங்கள் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளன. இதனை எதிர்த்தரப்பினர் புரிந்து கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## பாதுகாப்பு அங்கிகள் வழங்கல்





(மொனராகலை)

மொனராகலை மாவட்ட பொதுச்சுகாதார உத்தியோகத்தர்களுக்கு, ஊவா மாகாண முன்னாள் முதலமைச்சர் சஷிந்திர ராஜபக்ஷ, உயர்தரத்திலான பாதுகாப்பு அங்கிகளை வழங்கி வைத்தார்.

கதிர்காமம் முருகன் கோவிலின் கடமை நிறைவேற்று பஸ்நாயக்க நிலமே தில்ருவன் ராஜபக்ஷவின் ஏற்பாட்டில், நேற்று முன்தினம் சுகாதார பரிசோதகர்களுக்கு, பாதுகாப்பு அங்கிகள் வழங்கி வைக்கப்பட்டன. (ஜ)

## கர்ப்பிணிகளுக்கு போசாக்கு உணவுப்பொதி



(யாழ்ப்பாணம்)

கொரோனா வைரஸ் வரவலால் ஏற்பட்டிருக்கும் ஊரடங்கு நெருக்கடியால் அன்றாடம் உழைத்துவாழும் குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன. இவர்களுக்கான உலர் உணவுப்பொருட்களை வழங்குவதில் இருபாலை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் பொது அமைப்புக்களுடன் இணைந்து 600இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு இது வரை உதவித்திட்டங்களை வழங்கியது. அந்தவகையில் தற்போது பிரதேசத்தில் வதியும் கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்களுக்கானபோசாக்கு உணவுப் பொதிகளை வழங்கியது. ஐக்கிய இராச்சியம், கல்வியங்காடு,நல்லூர் நண்பர்கள் அமைப்பின் நிதிப்பங்களிப்புடன் இருபாலை தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச்சங்கத்தின் அனுசரணையுடன் கட்டப்பிராய் ஆரம்ப சுகாதார நிலைய குடும்பநல உத்தியோகத்தர் ஊடாக இப்பொருட்கள் கட்டப்பிராய் ஆரம்ப சுகாதார நிலையத்தில் வைத்து வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் குடும்பநல உத்தியோகத்தர், பணியாளர்கள், பிரதேசசபை உறுப்பினர் ந. கஜேந்திரகுமார், இருபாலை தெற்கு கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர் பா.பிரதீபன், இருபாலை தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவி. திருமதி சறோஜா தங்கராசா மற்றும் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (இ-9)

## அக்குரணை,பேருவளை விடுவிப்பு



(களுத்துறை)

முடக்கப்பட்டிருந்த கண்டி மாவட்டத்தின் அக்குரணை பிரதேசம் மற்றும் களுத்துறை மாவட்டத்தில் உள்ள பேருவளை பிரதேசங்களை மீண்டும் திறக்க தீர்மானித்துள்ளதாக இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அதன்படி, இன்று தொடக்கம் குறித்த பிரதேசங்களுக்கு பிறப்பிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுவதாக இராணுவத்தளபதி மேலும் தெரிவித்தார். (ஜ-4)

## கொரோனாவில் இருந்து எமது உயிர்காக்கும் நல்லுள்ளங்களுக்காக விளக்கேற்றி பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

சிவன் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் எம் உயிர் காக்கும் நல்லுள்ளங்களுக்காக பிரார்த்தனை விளக்கொன்றை ஏற்றி நன்றி சொல்வோம் எனும் தொனிப்பொருளில் விளக்கேற்றி பிரார்த்தனை செய்யும் நிகழ்வொன்றை ஏற்பாடு செய்துள்ளதாக சிவன் அறக்கட்டளை இயக்குநர் கணேஸ்வரன் வேலாயுதம் தெரிவித்தார்.

இன்று 4 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு நெல்லியடியில் அமைந்துள்ள சிவன் அறக்கட்டளை அலுவலக முற்றத்தில் இந்தப் பிரார்த்தனை நிகழ்வு இடம்பெறும்.

ஏனைய பொது மக்கள் தத்தம் வீட்டு முற்றங்களில் மேற்கொள்ளவுள்ளனர். ஏற்றிய விளக்கை புகைப்படமாகவோ அல்லது காணொலி ஊடாகவோ பதிவு செய்து சமூக வலைத் தளங்களில் பகிருங்கள் எனக் கோரிக்கை விடுத்துள்ளோம்.

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் நோக்கில் செயற்படும். ஜனாதிபதியின் செயலணி, படையினர், பொலிஸ் அதிகாரிகள், சுகாதார உத்தியோத்தர்கள் வைத்திய அதிகாரிகள் உள்ளிட்ட அனைவருக்கும் நல்லாசி வேண்டி விளக்கேற்றி பிரார்த்தனை செய்யும் நிகழ்வொன்றை முன்னெடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஹற்றன் போட்ஸிலி தோட்டத்தில்

# 14 வீடுகளைக்கொண்ட குடியிருப்பில் தீ

## 9 வீடுகள் முற்றாகத் தீக்கிரை

(ஹற்றன்)

ஹற்றன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட போட்ஸிலி தோட்டத்தில் 14 வீடுகளைக்கொண்ட குடியிருப்பில் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தில் 9 வீடுகள் முற்றாக எரிந்து தீக்கிரையாகியதுடன் மேலும் 5 வீடுகளுக்கு பகுதியளவு சேதங்கள் ஏற்பட்டன.



இதனால் 50 இற்கும் மேற்பட்டவர்கள் நிர்க்கதி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இவர்களை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி உரிய இடமொன்றில் தங்கவைப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

போட்ஸிலி தோட்டத்தின் கோவிலுக்கு அருகிலுள்ள நெருங்கிய குடியிருப்பிலேயே இவ்வாறு தீ விபத்து ஏற்பட்டது. ஊரடங்கு காரணமாக மக்கள் வீட்டுக்குள் இருக்கும் போது திடீர் தீப்பரவல் ஏற்பட்டது.

இதனையடுத்து மக்கள் பதறியடித்துக்கொண்டு பாதுகாப்பான இடத்துக்கு ஓடினர்.

பொலிஸாருக்கும், தீயணைப்புப் பிரிவினருக்கும் தகவல் வழங்கப்பட்டது. இதன்படி சம்பவ இடத்துக்கு விரைந்த ஹற்றன், டிக்கோயா நகரசபையின் தீயணைப்புப் பிரிவினர், மக்களுடன் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் முயற்சியில் இறங்கினர்.


இதற்கிடையில் அப்பகுதியில் மக்கள் குவிந்ததால், சமூக இடைவெளியைப் பின்பற்றி உரிய வகையில் இருக்குமாறு பொலிஸாரால் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டது.

இத்தீவிபத்தால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படாதபோதிலும், பெருமளவில் பொருட் சேதம் ஏற்பட்டது. வீட்டு உபகரணங்கள், முக்கிய ஆவணங்கள், தங்க நகைகள், பாடசாலை மாணவர்களின் சீருடைகள் மற்றும் பாடப் புத்தகங்கள் தீக்கிரையாகியதாக மக்கள் தெரிவித்தனர்.

ஒரு சில பொருட்கள் மாத்திரமே மக்களால் பாதுகாக்கக் கூடியதாகயிருந்தது. தீ விபத்துக்கான காரணம் இன்னும் கண்டறியப்படாத நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

"டெங்கு பலியெடுத்த போதும் தேர்தல் நடந்தது"

# பந்துலவின் கருத்து முட்டாள்தனமானது ஹரீன் காட்டம்; சங்கா விமர்சனம்


(கொழும்பு)

அமைச்சர் பந்துல குண வர்த்தனவின் கருத்து தொடர்பில் இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார உட்பட பல அரசியல்வாதிகள் தமது கருத்துக்களை வெளியிட்டனர்.

நாட்டில் கொரோனா வைரஸ் தாக்கம் காணப்படுகின்ற போதும் பாராளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டும் என்ற முனைப்புடன் அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது.

ஆனால் நாட்டு மக்களின் நலன் கருதி பொதுத்தேர்தலை நடத்த வேண்டாம் என் எதிர்க்கட்சிகள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்து வருகின்றன.

இந்நிலையில் கடந்த வருடங்களில் டெங்குத் தாக்கத்தால் வருடமொன்றுக்கு 500இற்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழக்கும் போது தேர்தலை நடத்தாமலா இருந்தோம் என அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குண வர்த்தன கேள்வியெழுப்பியிருந்தார்.

இவருடைய இந்தக் கருத்துக்குப் பல தரப்பிலிருந்தும் எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளன.

இந்நிலையில் இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்காரவும் தனது கருத்தை வெளியிட்டார்.

அமைச்சர் பந்துல குண வர்த்தனவின் கருத்து மிகவும் அறிவார்ந்த கருத்தா? என்று குமார் சங்கக்கார தனது டுவிட்டர் பதிவில் கேள்வி எழுப்பினார்.

இதேவேளை பந்துல குண வர்த்தன கூறியுள்ள முட்டாள் தனமாக கருத்தானது தற்போதைய அமைச்சரவை எப்படியானது என்பதை வெளிக்காட்டியுள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார். (இ-7)

# பாதிக்கப்பட்டவர்களின் வசதிக்காக வங்கிகளின் முடிவு திகதிகள் நீடிப்பு

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி கொவிட் - 19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிநபர்களின் வசதிக்காக முடிவுத் திகதியை நீடித்துள்ளது.

கொவிட் - 19 பரம்பலினால் நிதி நிறுவனங்களிடமிருந்து குறிப்பிட்ட நிவாரணங்களைப் பெற்றுக்கொள்வதில் பாதிக்கப்பட்ட சில வாடிக்கையாளர்களால் எதிர்கொள்ளப்படும் கஷ்டங்களைக் கருத்திற் கொண்டு இலங்கை மத்திய வங்கிக் கடன் பிற்போடுதல் மற்றும் இரண்டு மாத தொழிற்படு மூலதனத்திற்காக 4 சதவீத வருடாந்த வட்டியுடைய மீள்நிதியிடல் வசதி போன்றவற்றிற்கான வேண்டுகோளைச் சமர்ப்பிக்கும் முடிவுத் திகதியினை கடந்த 30ஆம் திகதியிலிருந்து மே 15ம் திகதிவரை நீடித்திருக்கின்றது.

மேலும், ரூ.5 இலட்சத்திற்குட்பட்ட பெறுமதியுடைய காசோலைகளின் செல்லுபடிக்காலம் காலாவதியாகியிருக்குமிடத்தில், எதிர்வரும் 15ஆம் திகதி வரை அதனுடைய செல்லுபடியாகும் காலமாகக் கருத்திற்கொள்ள வேண்டுமென வங்கிகள் வேண்டிக் கொள்ளப்படுகின்றன. (ஜ-4)

# லண்டனிலிருந்து நாடு திரும்புபவர்களுக்கு விசேட விமான சேவை

(கொழும்பு)

லண்டன் மற்றும் அவுஸ்திரேலியாவின் மெல்பேர்னில் இருந்து நாடு திரும்ப எதிர்பார்த்துள்ள இலங்கையர்களுக்காக விசேட விமான சேவைகளை முன்னெடுக்க ஸ்ரீலங்கன்விமான சேவை தீர்மானித்துள்ளது.

பிரித்தானியாவின் லண்டன் மற்றும் அவுஸ்திரேலியாவின் மெல்பேர்னில் இருந்து நாடு திரும்ப எதிர்பார்த்துள்ள இலங்கையர்களுக்காக விசேட விமான சேவைகளை முன்னெடுக்க ஸ்ரீலங்கன் விமான சேவை தற்போது தீர்மானித்துள்ளது.

அந்தவகையில், இன்றும் நாளையும் விசேட விமான சேவை முன்னெடுக்கப்படவுள்ளது.

லண்டனில் இருந்து மூன்று விமான சேவைகளும் மெல்பேர்னில் இருந்து ஒரு விமான சேவையும் முன்னெடுக்கப்படவுள்ளதாக ஸ்ரீலங்கன் விமான சேவை தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க, எதிர்வரும் 8 ஆம் திகதி மெல்பேர்னில் இருந்து கொழும்பு நோக்கி ஒரு விமானம் பயணிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

## fb (f)ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... 2029 facebook

**கபிலா**




பாஸ்... கொரோனாவால வாயையும் கையையும் மூடிட்டு இருக்கனும்னு சொல்றாங்களே உங்களுக்கு அது கஷ்டமா இல்லையா? இல்லடா ஏன்னா என் பொண்டாட்டி 10 வருஷமா என்ன அப்படித்தான் வைச்சிருக்கா

**மாறன்**



சாப்பிடும் போது அப்பளம் ஏன் தராங்கனு தெரியுமா? சோறு சூடா இருந்தா விசிறிக்கத்தான்

**வெற்றி**



ஏய் கொரோனா உன்னால மார்ச்சில இன்கிரிமென்ட் போச்சு, ஏப்ரலில சம்பளமும் போச்சே...

**விஷ்ணு**



ஆமை ஆயிரம் முட்டை போட்டுட்டு அமைதியாக இருக்கு... கோழி ஒருமுட்டை போட்டுட்டு ஊரையே கூப்பிடுது. இங்க சில உதவிகளும் அப்படித்தான்

**ராஜேஷ்**



என்னாங்க அது தண்ணிங்க... ரசம் இங்க இருக்கு இத ஊத்திக்குங்க... பரவால்ல விடுமா... அதைவிட இது நல்லா இருக்கு

**சுமிதா**



விழும் போது "அம்மா" எழும் போது "அப்பா" காக்கவும் தூக்கவும் தாய் தந்தையரால் மட்டுமே முடியும்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# வவுனியாவிலிருந்து டுபாய்க்கு பப்பாசிப்பழங்கள் ஏற்றுமதி



(குருமன்காடு)

வவுனியாவில் உள்ள பழச் செய்கையாளர்களிடம் கொள்வனவு செய்யப்பட்ட பப்பாசிகளை டுபாய் நாட்டுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா, பம்பைமடு கமநல அபிவிருத்தித் திணைக்களப் பிரிவில் இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.விஜயகுமார் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட அரச அதிபர் சமன பந்துலசேன கலந்து கொண்டு ஏற்றுமதிக்கான விற்பனையை ஆரம்பித்து வைத்தார்.

ஒரு கிலோ பப்பாசி 20 ரூபாய் படி கொள்வனவு செய்யப்பட்டு டுபாய் நாட்டுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பழச் செய்கையாளர்களுக்கான சந்தை வாய்ப்பு வசதி பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கமநல அபிவிருத்தி திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.விஜயகுமார் கருத்து தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தில் மேலதிகமாக மரக்கறிகள் மற்றும் பழங்கள் தேவையான அளவு காணப்பட்டன. இவற்றினை விற்பனை செய்ய முடியாத சூழ்நிலை காணப்பட்ட போதும், தற்போது வரை 50க்கு மேற்பட்ட நபர்களுக்கும், வெளி மாவட்டங்களுக்கும் அவற்றை கொண்டு சென்று விற்பனை செய்ய உரிய அனுமதிகள் கொடுக்கப்பட்டுள்ளன.

இதனால் விவசாயிகள் தங்களது மரக்கறிகளை விற்பனை செய்ய முடியாத நிலை காணப்பட்டால் அவர்களை தொடர்பு கொண்டு விற்பனை செய்ய முடியும். அதன் ஒரு கட்டமாக டுபாய் நாட்டுக்கு பழங்களை ஏற்றுமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பழச் செய்கையாளர்கள் நன்மைகளைப் பெற முடியும் எனத் தெரிவித்தார். (9-250)

# கேப்பாபிலவு தனிமைப்படுத்தல் நிலையத்தில் உயிரிழந்த முதியவர்களின் சடலங்கள் முள்ளியவளை களிக்காட்டுப் பகுதியில் தகனம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு கேப்பாபிலவு தனிமைப்படுத்தல் முகாமில் கடந்த வெள்ளிக்கிழமை உயிரிழந்த இரண்டு முதியவர்களின் சடலங்கள் முள்ளியவளை களிக்காட்டு பகுதியில் நேற்று முன்தினம் இரவு தகனம் செய்யப்பட்டுள்ளது. முல்லைத்தீவு கேப்பாபிலவு விமானப் படை முகாமில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த குணசிங்கபுர பகுதியை சேர்ந்த யாசகர் உயிரிழந்த நிலையில் அவருக்கு கொரோனா தொற்று இல்லை என அறிவிக்கப்பட்ட நிலையில் அவரது சடலத்தை முல்லைத்தீவு குமாரபுரம் மாவடிப்புலவு இந்து மயானத்தில் எரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்நிலையில் சடலத்தை வாகனத்தில் ஏற்றிய வைத்தியசாலை நிர்வாகத்தினரையும் இறுதிக்கிரிகைகள் நடைபெறும் இடத்துக்கு வருமாறு பொலிஸார் அழைத்த போது அவர்களை அழைப்பதற்கான நீதிமன்ற கட்டளை இல்லாத நிலையில் சுமார் இரண்டு மணி நேரமாக சடலம் ஏற்றிய வாகனம் வைத்தியசாலை வளாகத்தில் இருந்தது

அந்த பிரச்சினை முடிவுக்கு கொண்டுவரப்பட்டு சடலம் எடுத்து செல்ல தயாரான போது முல்லைத்தீவு இளைஞர் குழு ஒன்று வருகைதந்து சடலத்தை எரிப்பதற்கு தடை விதித்தது. பின்னர் மக்கள் நடமாட்டம் இல்லாத முள்ளியவளை களிக் காடு காட்டுப்பகுதியில் எரிப்பதற்காக முடிவெடுக்கப்பட்டு குறித்த முதியவராது சடலம் நேற்று முன்தினம் இரவு களிக்காடு காட்டுப்பகுதியில் எரிப்பதற்காக கொண்டு செல்லப்பட்டு எரிப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றது. இந்த நிலையில் இரண்டாவதாக உயிரிழந்த மற்றைய முதியவருக்கு கொரோனா தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் நீதிமன்ற அனுமதி பெறப்பட்டு அவரது சடலமும் கொண்டுவரப்பட்டு இரண்டு சடலங்களும் நேற்றுமுன்தினம் தகனம் செய்யப்பட்டன. (9-281)


# வீட்டில் தீ விபத்து



(நெளுக்குளம்)

வவுனியா திருநாவற்குளம் பகுதியில் அமைந்துள்ள தற்காலிக வீடொன்று நேற்று திடீரென தீ பிடித்து எரிந்துள்ளது. குறித்த பகுதியில் வசிக்கும் வறிய குடும்பத்துக்கு சொந்தமான தற்காலிக வீடொன்றில் சமைக்கும் போதே திடீரென தீ பிடித்துள்ளது. தீ பரவுவதை அவதானித்த அயலவர்கள் உடனடியாக தண்ணீரை ஊற்றி தீயினை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்திருந்தனர். இவ் விபத்தினால் எவ்வித உயிராபத்துக்களோ, சேதங்களோ ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (9-299)

# கொரோனாவிலிருந்து பாதுகாக்கவேண்டி கிளிநொச்சியில் திருமுறை முற்றோதல்



(சிவநகர்)

கொரோனா தொற்று நோயிலிருந்து அனைவரும் பாதுகாக்கப்படவும் நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலவவும் வேண்டி கிளிநொச்சி மாவட்டத்தின் புராதன ஆலயமான உருத்திரபுரம் சிவன் ஆலயத்தில் திருமுறை முற்றோதல் நிகழ்வு கடந்த ஏப்ரல் 10ம் திகதி தொடக்கம் நடைபெற்று வருகிறது. தொடர்ச்சியாக ஒரு மாதத்திற்கும் இத் திருமுறை முற்றோதல் நடைபெறவுள்ளது. (9-254)

# சிகையலங்கார நிலையங்கள் மூடப்பட்டுள்ளதால் அவற்றை நம்பியுள்ள தொழிலாளர்கள் பெரும் பாதிப்பு

(குருமன்காடு)

சிகையலங்கார நிலையங்கள் மூடப்பட்டுள்ளமையால் வவுனியாவில் சுமார் 500 வரையிலான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா அழகக கூட்டுறவுச் சங்க பொருளாளர் அந்தோனிப்பிள்ளை கிருபைராசா தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் உள்ள அழகக சங்க தொழிலாளர்களின் நிலை தொடர்பில் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

செட்டிகுளம் தொடக்கம் ஓமந்தை வரையிலான எமது சங்கத்தில் உள்ள எமது அழககங்களை உள்ளடக்கி வவுனியா மாவட்ட அழகக கூட்டுறவுச் சங்கமாக பதிவு செய்துள்ளோம். கொரோனா தாக்கம் காரணமாக எமது தொழிலாளர்களின் 500 வரையிலான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

அவர்கள் நாளாந்தம் இந்த தொழிலை நம்பியே வாழ்ந்து வந்தார்கள். கடந்த ஒன்றரை மாதங்களாக சுகாதார அதிகாரிகளின் கோரிக்கைக்கு அமைவாக மூடியுள்ளோம்.

எமது பாதுகாப்பு மட்டுமல்ல சமூக பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு நாம் நிலையங்களை மூடியிருக்கின்றோம்.

இதனால் எமது சங்க உறுப்பினர்கள் பலரது குடும்பங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். வேறு தொழில் செய்ய முடியாதவர்களாக உள்ளனர்.

எனவே அரசாங்கம் பாதுகாப்பான சுகாதார வழிமுறைகளை ஏற்படுத்தி சிகை அலங்கார நிலையங்களை திறப்பதற்கு அனுமதி வழங்க வேண்டும். அல்லது எமது தொழிலாளர்களுக்கான இழப்பீடு வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (9-250)




# பொலிஸாரின் தங்குமிடமாக வவுனியா குடியிருப்பு கலாசார மண்டபம்

(நெளுக்குளம்)

வவுனியாவில் கடமையில் ஈடுபட்டுவரும் பொலிஸார் தங்குவதற்கு வவுனியா குடியிருப்பு கலாசார மண்டபத்தில் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. கொரோனோ வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் வவுனியாவில் பல்வேறு நடவடிக்கைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் கடமையில் ஈடுபட்டுவரும் பொலிஸார், பொதுமக்கள் மற்றும் பல்வேறு தரப்புகளுடனும் தொடர்புகளை பேணிவருவதுடன், கடமைநேரங்கள் முடிவடைந்ததும் மீண்டும் பொலிஸ் நிலையங்களிற்கு செல்கின்றனர். இதனால் பொலிஸ் நிலையங்களில் இருந்து பணியாற்றும் உத்தியோகத்தர்களும் பாதிக்கப்படும் சூழல் ஏற்பட்டுள்ளது.

இதனை தடுக்கும் நோக்கில் வெளியில் சென்று கடமைகளில் ஈடுபட்டுவரும் பொலிஸார் தங்குவதற்காக வவுனியா குடியிருப்பு கலாசார மண்டபத்தை பயன்படுத்தி வருகின்றனர். (9-299)

# புதுக்குடியிருப்பில் வெடிபொருட்கள் மீட்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் உள்ள சுனாமி நினைவாலயத்திற்கு முன்னால் உள்ள வீதி ஓரத்தில் வெடி பொருட்கள் புதைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து நேற்று முன்தினம் அப் பகுதியில் பொலிஸார் அகழ்வு நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றின் அனுமதியுடன் குறித்த பகுதி விசேட அதிரடிப்படையினரால் பைக்கோ இயந்திரம் கொண்டு அகழப்பட்டது. இதன்போது மூன்று ஆர்.பி.ஜி. எறிகணைகள் உள்ளிட்ட வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. (9-281)

# தீ அனர்த்தத்தை கட்டுப்படுத்த மன்னாரில் தற்காலிக ஏற்பாடு

(மன்னார்)

மன்னாரில் திடீர் தீ அனர்த்தத்தின் போது அதனை கட்டுப்படுத்த தீ அணைப்பு வாகனம் இல்லாமையால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்ற நிலையில் மன்னார் நகர சபையின் ஏற்பாட்டில் நீர் பௌசர் ஒன்றை தற்காலிகமாக தீ அணைப்பு வாகனமாக பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மன்னார் நகர சபைக்குச் செந்தமான பௌசர் வாகனம் ஒன்றை அதி வேகத்துடன் நீரை பாய்ச்சக்கூடிய் வகையில் அமைத்து தீயை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தீ அணைப்பதற்காக தயார் செய்யப்பட்ட குறித்த தீ அணைப்பு பௌசர் கடந்த வெள்ளிக்கிழமை பரிசீலிக்கப்பட்டது. மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.அன்ரனி டேவிட்சன்,மன்னார் நகர சபையின் செயலாளர் பிரிட்டோ லெம்பேட் ஆகியோர் இணைந்து பரிசீலனைகளை மேற்கொண்டனர். (9-285)

# இலங்கை அரசியலமைப்பும் 19 வது திருத்தம் சம்பந்தமான விமர்சனங்களும்

14

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் -எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



பிரதமரினதும் ஆளுந்தரப்பு மற்றும் எதிர்த்தரப்பு அங்கத்தவர்களினதும் கருத்துக்களில் ஏற்கனவே உயர் நீதிமன்றங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கின்ற நீதியரசர்களின் நியமனங்கள் தொடர்பில் நான் எனது எதிர்ப்பை தெரிவிக்கின்றேன். அல்லது அந்நியமனங்கள் பற்றி விமர்சிக்கின்றேன் என்ற கருத்தையே அவர்கள் வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். ஆயினும் உச்ச நீதிமன்றத்திற்கோ மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கோ நியமனங்களைப் பெற்றிருக்கும் நீதியரசர்கள் பற்றி நான் எந்தவித விமர்சனத்தையோ குற்றச்சாட்டையோ முன்வைக்கவில்லை என்பதை மிகத் தெளிவாக கூறிக்கொள்ள விரும்புகின்றேன். அத்தோடு அந்த நியமனங்கள் தொடர்பில் நான் எந்தவித எதிர்ப்பையும் வெளிப்படுத்தவும் இல்லை.

ஆயினும் இப்பிரச்சினையை திரிபுபடுத்தி நீதித்துறைக்கும் நாட்டுக்கும் என்னைப் பற்றி மிகத் தவறான ஒரு தோற்றத்தை உருவாக்க சிலர் முயற்சி எடுக்கின்றார்கள் என்பதை நான் உணர்கின்றேன். சபாநாயகரும் ஏனைய சபை அங்கத்தவர்களும் நான் இந்த உயரிய சபையின் அங்கத்தவர் அல்ல என்பதை அறிவீர்கள். நான் இன்று இங்கு உரையாற்றுவது அரசியல் யாப்பில் ஜனாதிபதிக்கு பாராளுமன்றத்திற்கு வருகை தருவதற்கும் உரையாற்றுவதற்கும் வழங்கப்பட்டிருக்கும் விதிமுறைகளுக்கு அமையவே என்பதை விசேடமாக நான் இங்கு குறிப்பிட வேண்டும்.

2015 ஜனவரி 08 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது நாமும் சபாநாயகர் உள்ளிட்ட ஏனையோரும் ஒரு தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டோம். அதில் எம்முடன் இணைந்து கையொப்பமிட்ட தரப்பினரைப் பற்றி நீங்களும் இச்சபையில் ஆளுந்தரப்பையும் எதிர்த்தரப்பையும் பிரதிநிதித்துவப்படுத்துவோருக்கும் ஞாபகம் இருக்கும் என நான் நினைக்கின்றேன். அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், சிவில் அமைப்புகள் உள்ளிட்ட 49 அமைப்புகள் வரலாற்று முக்கியத்துவமிக்க அப்பிரகடனத்தில் விகாரமகாதேவி பூங்காவில் வைத்து கையொப்பமிட்டார்கள். கையொப்பமிடப்பட்ட இப்பிரகடனத்தில் உள்வாங்கப்பட்டிருந்த விடயங்கள் குறிப்பாக மிக முக்கியமான உள்நாட்டு வெளிநாட்டு அரசியல் எண்ணக்கருக்களைக் கொண்டிருந்தது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் அநேகமான நல்லாட்சி பற்றிய கருத்துக்களை அப்பிரகடனத்தில் நாம் உள்வாங்கச் செய்தோம். குறிப்பாக நல்லாட்சி என்ற கருப்பொருளும் அதற்கு அடிப்படையாக அமைந்த பெருமளவு விடயங்களும் அதில் உள்வாங்கப்பட்டன. அவ்வாறு முன்வைக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் நாட்டு மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதியினையே 19வது சீர்திருத்தம் மூலம் நாம் நிறைவேற்றினோம். நான் ஜனாதிபதி பதவியை ஏற்ற மறுகணமே ரணில் விக்கிரமசிங்கவும் என் முன்னால் பிரதமர் பதவியில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார் என்பதை உங்களுக்கும் மதிப்பிற்குரிய இச்சபையின் அனைவருக்கும் ஞாபகமிருக்கும். எமக்கிடையே ஏற்படுத்திக் கொண்டிருந்த இணக்கப்பாட்டுக்கும் உடன்பாட்டுக்கும் அமைவாகவே அப்படி செய்து கொள்ளப்பட்டது. அத்தோடு அந்த இணக்கப்பாட்டுக்கு அமைய செயற்படுவதற்காக எம்மால் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளுக்கு அமைவாக ரணில் விக்கிரமசிங்க 2015 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் வரை பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்ட போது எனது ஞாபகத்திற்கு ஏற்ப இச்சபையில் ஐக்கிய தேசியக் கட்சியின் 41 அல்லது 47 பாராளுமன்ற உறுப்பினர்களே இருந்தார்கள். அந்த எண்ணிக்கை சரியாக இப்போது என் ஞாபகத்தில் இல்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 142 பாராளுமன்ற உறுப்பினர்கள் அச்சமயம் இருந்தார்கள். அதிலும் 127 பாராளுமன்ற உறுப்பினர்கள் நேரடியாகவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களாகவே இருந்தார்கள். ஏனையோர் இடதுசாரி முற்போக்கு அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அங்கத்துவ கட்சிகளின் உறுப்பினர்களாகும்.

அன்று நான் ஜனாதிபதி பதவியை ஏற்று சுமார் மூன்று வாரங்களுக்குள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியை என்னிடம் ஒப்படைத்ததன் பின்னர் பாராளுமன்றத்தினுள் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற வேற்றுமையின்றி புதிய அரசாங்கம் என்ற வகையில் எமது செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கும் ஜனாதிபதி என்ற வகையில் எனது பணிகளை முன்னெடுப்பதற்கும் இந்த உயரிய அவையின் அறுதிப் பெரும்பான்மையினர் எமக்கு கால அவகாசத்தைப் பெற்றுக் கொடுத்தார்கள். அதன்போது ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, மக்கள் விடுதலை முன்னணி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆகிய இவ்வனைத்து தரப்புகளும் அந்த குறிப்பிட்ட காலக்கட்டத்திற்குள் மிகுந்த ஒத்துழைப்புடனும் நட்புடனும் அரசிற்கு ஒத்துழைப்பை வழங்கின. இந்த ஒத்துழைப்பின் காரணமாகவே எம்மால் 19வது அரசியலமைப்பு சீர்திருத்தத்தை நிறைவேற்ற முடிந்தது.

225 உறுப்பினர்களில் 215 உறுப்பினர்கள் அதற்கு சார்பாக அவர்களது வாக்குகளை அளித்திருந்தார்கள் என்பதை சபாநாயகரும் அறிவீர்கள். இன்று எதிர்க்கட்சியில் இருக்கும் பெருமளவான பாராளுமன்ற உறுப்பினர்களும் கடந்த பாராளுமன்ற தேர்தலுக்கு முன்னர் இந்த மதிப்பிற்குரிய அவையை பிரதிநிதித்துவப்படுத்திய அனைவரும் அவ்வாக்கெடுப்பில் அவர்களது வாக்குகளை இதற்காக பெற்றுக் கொடுத்தார்கள். அவ்வாறு வாக்குகளைப் பெற்றுக்கொடுத்து உருவாக்கிய 19வது சீர்திருத்தமானது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிக்கப்பட்டிருந்த மிகத் தெளிவான ஒரு விடயமாக, வாக்குறுதியாக, உடன்படிக்கையாகவே இருந்தது.

2015 ஏப்ரல் 27 மற்றும் 28 ஆகிய இரு தினங்களாக 19வது சீர்திருத்தம் மீது இவ் அவையில் மிக நீண்ட விவாதங்கள் நடத்தப்பட்டன. ஆரம்பத்தில் அப்போதைய சபாநாயகராக இருந்த சபாநாயகர் முன்பாக கட்சித் தலைவர்களின் கூட்டத்தின் போது ஒன்றரை நாள் விவாதத்தின் பின்னர் 28 ஆம் திகதி பகல் 12 மணிக்கு வாக்கெடுப்பு நடத்துவதாகவே தீர்மானிக்கப்பட்டிருந்தது.

சபாநாயகர் அவர்களே, நேற்றும் இன்றும் நான் ஹன்சாட் அறிக்கைகளை மிக உன்னிப்பாக வாசித்தேன். 27 ஆம் திகதி காலை ஆரம்பிக்கப்பட்ட விவாதம் 28 ஆம் திகதி பகல் 12 மணிக்கு முடிக்கப்பட்டு வாக்கெடுப்பு நடத்துவதென தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அன்றைய தினம் மாலை 05 மணி வரை அவ் வாக்கெடுப்பு பிற்போடப்பட்டது. கட்சித் தலைவர்களின் உடன்பாட்டிற்கு அமைய அன்று மாலை ஐந்து மணிக்கு நடத்தவிருந்த வாக்கெடுப்பின் போது 19வது சீர்திருத்தம் சம்பந்தமாக மதிப்பிற்குரிய அவையின் செயற்குழுக் கூட்டத்தின் போது கடுமையான திருத்தங்கள் பற்றி ஏற்பட்ட சூடான நிலைமை காரணமாகவே 12 மணிக்கு நடத்தவிருந்த வாக்கெடுப்பு ஐந்து மணி வரை பிற்போடப்பட்டது.

ஆயினும் அன்றைய தினம் மாலை நான்கு மணி அளவில் ஐந்து மணிக்கு நடத்தவிருந்த வாக்கெடுப்பை நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டது. அதன்போது கட்சித் தலைவர்களின் இணக்கப்பாட்டுக்கு அமைய ஏழு மணிக்கு வாக்கெடுப்பு நடத்த தீர்மானிக்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27, 28 ஆகிய இரண்டு தினங்களிலும் முழு நாளும் நான் பாராளுமன்றத்திலேயே இருந்தேன். அப்படி இருந்ததற்கு காரணம் அமைச்சர மங்கள சமரவீர. இதற்கு முன்னும் குறிப்பிட்டதைப் போன்று என்னால் பெற்றெடுக்கப்பட்ட 19வது சீர்திருத்தம் எனும் குழந்தை பேறிற்கே ஆகும். அவ்வாறு நான் பெற்றெடுத்தது ஒழுக்கமான குழந்தையே ஆகும். அத்தகையதோர் ஒழுக்கமான குழந்தையை பல எதிர்பார்ப்புகளுக்கு மத்தியிலேயே நான் பெற்றெடுத்தேன். இவ்வுலகில் பிறக்கின்ற குழந்தைகளை ஒழுக்கமான குழந்தைகள் என்றும் இன்னும் வேறு விதமான குழந்தைகள் என்றும் கூறப்படுவதுண்டு. நாம் பெற்றெடுத்த குழந்தை நல்வழியில் பிறந்த ஒழுக்கமான குழந்தையாகும்.

இந்த நாட்டின் சிறந்ததோர் அரச நிர்வாகத்திற்காகவே அக்குழந்தையை நாம் பெற்றெடுத்தோம். அவ்வாறு நாம் பெற்றெடுத்த 19வது சீர்திருத்தம் என்னும் குழந்தையை பெற 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் 28 ஆம் திகதி மாலை இந்த அரசாங்கத்தின் சார்பில் கைகொடுத்து உதவியவர் என்ற வகையில் இப்போது இந்த சபையில் காணப்படாவிட்டாலும் விஜயதாஸ ராஜபக்ஷ ஒரு அமைச்சர் என்ற வகையில் அன்று இந்த அவையில் எதிர்க்கட்சியிலிருந்து எழுந்த அத்தனை வாதப் பிரதி வாதங்களுக்கும் முகங்கொடுத்த அவருக்கு நான் நன்றி கூற விரும்புகின்றேன். அதன் பின்னரும் அரசியலமைப்பு சபையின் அரசியல்வாதிகள் எத்தனை பேர், சிவில் அமைப்புக்கள் எத்தனை, தொழிற்சார் நிபுணர்கள் எத்தனை பேர் ஆகிய விபரங்கள் பற்றி மிகக் கடுமையாக கலந்துரையாடப்பட்டன.

எவ்வாறாயினும் ஒரு ஒழுக்கமான குழந்தையை பெற்றெடுக்க வேண்டும் என்ற உன்னதமான குறிக்கோளுடன் முன்னெடுக்கப்பட்ட அவ்விடயங்கள் மிகத் தெளிவாக சிறந்த அரச நிர்வாகத்தில் இருக்க வேண்டிய அம்சங்களுக்கு மாறாக இன்று இந்த அரசியலமைப்பு சபை லங்காதீப பத்திரிகையின் ஊடகவியலாளர் குசல் பெரேரா கூறியிருப்பதைப் போலவே 19வது சீர்திருத்தம் எனும் குழந்தை பிறப்பிலேயே முடக்கமான அல்லது அங்கவீனமான குழந்தையாக்கப்பட்டிருக்கின்றது.

சபாநாயகர் அவர்களே, குறிப்பாக இன்று ஆளுங்கட்சியில் இருக்கும் உறுப்பினர்கள் குசல் பெரேரா சுதந்திரமான கருத்தைக் கொண்ட ஊடகவியலாளர் என நீங்கள் அனைவரும் ஏற்றுக்கொள்கின்றீர்கள் என நான் நினைக்கின்றேன். அவரின் கருத்துக்களை நூற்றுக்கு தொண்ணூறு சதவீதம் நான் ஏற்றுக் கொள்கிறேன். இன்று லங்கா தீப பத்திரிகையில் அவர் வெளியிட்டிருந்த கட்டுரையை நான் 90 சதவீதம் ஏற்றுக்கொள்கிறேன். 19ஆவது திருத்தச் சட்டம் பிறக்கும் போதே ஊனமாக பிறந்தது என்று நான் கூறவில்லை.

ஒரு ஊடகவியலாளர் கூறுகின்றார். அதை அவர் எவ்வாறு தெளிவுபடுத்துகிறார் என்றால் அரசியலமைப்பு சபையின் அரசியல்வாதிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதும் நல்லாட்சி எண்ணக்கருவிற்கு உள்ளடங்க வேண்டிய தொழில் நிபுணர்கள், அறிஞர்கள், சிவில் சமூக பிரதிநிதிகளை விட அரசியல்வாதிகள் அதில் உள்ளடங்கியிருப்பதனால் அரசியலமைப்பு சபையினூடாக எதிர்பார்த்த விடயங்கள் நிறைவேறாமல் அச்சபை வேறொரு வழியில் செல்வதை அந்த கட்டுரையில் தெளிவாக குறிப்பிட்டிருந்தார்.

சபாநாயகர் அவர்களே! இந்த நிலைமையை கருத்திற்கொண்டு நான் ஒன்றை தெளிவாக கூறிக்கொள்ள விரும்புகிறேன். 19ஆவது திருத்தச்சட்டத்தின் ஊடாக வரையறையற்ற நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியின் அதிகாரங்களை பாராளுமன்றத்திற்கும் பாராளுமன்ற அரசியலமைப்பு சபைக்கும் அதனூடாக சுயாதீன ஆணைக்குழுக்களுக்கும் வழங்கப்பட்டன.

கௌரவ சபாநாயகர் அவர்களே! இங்கிருக்கும் அனைத்து மதத்தினரும் தானம் வழங்குவதற்கு மிகவும் விருப்பம் கொண்டவர்கள். எமது இலங்கை கலாசாரத்தினுள் சிங்களவரோ இந்துக்களோ இஸ்லாமியர்களோ கிறிஸ்தவர்களோ உலகில் வேறு எந்த நாட்டிலும் இல்லாதவாறு தானங்களை வழங்குகின்றனர். இலங்கையை போல் வேறு எந்த நாட்டிலும் தானம் வழங்குகின்ற நிகழ்வுகள் எங்கும் இல்லை.

பௌத்த வரலாற்றின் ஆரம்ப காலம் முதலே நாங்கள் தானங்கள் வழங்குகிறோம். அன்னதானம், ஆடைகளை தானமாக வழங்குவது, சொத்துக்களை தர்மம் செய்வது மாத்திரமன்றி, 30 ஆண்டுகால யுத்தத்திற்கு எமது இராணுவத்தினர் உயிரையே தானமாக வழங்கினர். எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்தின் யுத்த தாங்கிகள் வரும்போது அவர்கள் அதன் மீது பாய்ந்து அவர்களது உயிரை தானம் செய்தார்கள். அதேபோன்று இரத்தத்தை தானமாக வழங்குவார்கள். நானும் அன்னதானம் வழங்கியுள்ளேன். ஆடைகளை தர்மம் செய்துள்ளேன். இளமை பருவத்தில் இரத்ததானம் செய்துள்ளேன். உலகில் சில நாடுகளில் உடலுறுப்புகளையும் தானமாக வழங்குகிறார்கள்.

அதை நீங்கள் அறிவீர்கள். சபாநாயகர் அவர்களே! ஆனால் அதிகாரத்தை தானமாக வழங்கியவர்கள் சில பேரே உள்ளனர். 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நான் பெற்ற வெற்றியின் பின்னர் மக்களுக்கு அளித்த வாக்குறுதிக்கமைய எனது அதிகாரத்தை தானமாக வழங்கினேன்.

உலகில் எத்தனை பேர் அவ்வாறானதொரு செயலை செய்திருப்பார்கள் என்பதை நான் அறியேன். நான் மேல் குறிப்பிட்டது போல் உணவு, உடைகள், இயன்றளவு பணம், இரத்தம் ஆகியவற்றை தானமாக வழங்கிய நான், அதிகாரத்தை பெற்றவுடன் உலகில் எந்த தலைவரும் முன்வராத விடயமான என்னிடம் இருந்த அதிகாரத்தை நான் தானமாக வழங்கினேன். உன்னத எண்ணத்துடன் அரசாங்கத்தின் நடவடிக்கைகளையும் கொள்கைகளையும் நிறைவேற்றிக் கொள்வதற்கு நான் அவ்வாறே எனது பங்களிப்பை வழங்கினேன்.

19ஆவது திருத்தச் சட்டம் எனப்படும் குழந்தை துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகியிருப்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். சபாநாயகர் அவர்களே! நான் இவ்வாறு தெரிவிப்பதற்கு என்னிடம் ஆதாரங்கள் உள்ளன. மக்களுக்கு நன்மையை பெற்றுக்கொடுக்கும் உன்னத நோக்கத்துடன், 19ஆவது திருத்த சட்ட அரசியலமைப்பு சபையை நிறுவினோம். சுயாதீன ஆணைக்குழுக்களை நியமித்தோம்.

சுயாதீன ஆணைக்குழுக்களினதும் அரசியலமைப்பு சபையினதும் பொறுப்புகள் மற்றும் முன்னோடி நடவடி க்கை தொடர்பில் 19ஆவது திருத்தச் சட்டத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் 19ஆவது திருத்தச் சட்டத்தில் காணப்படும் எதையுமே நாம் செய்யவில்லை.

(தொடரும்....)

# ஊரடங்கு உத்தரவை மீறிய 44 ஆயிரத்து 231 பேர் கைது

## 11 ஆயிரத்து 460 வாகனங்கள் பறிமுதல்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்காக அமுல்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டத்திற்குப் புறம்பாகச் செயற்பட்டதாக இதுவரையில் 44 ஆயிரத்து 231 பேர் கைது செய்யப்பட்டதுடன் . இவர்களிடமிருந்து 11 ஆயிரத்து 460 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

வைரஸ் தொற்றால் ஏற்படும் நெருக்கடிநிலைமையைக் கருத்திற்கொண்டு , கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்காக கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி முதல் நாடுபூராகவும் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டது. இதன் போது இடர்வலயங்களைத் தவிர ஏனைய பகுதிகளில் ஊரடங்கு தளர்த்தப்பட்டு மீண்டும் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

இடர் வலயங்களைத் தவிர ஏனைய பகுதிகளுக்கான ஊரடங்கு இன்று திங்கட்கிழமை தளர்த்தப்பட்டு நாளை மறுதினம் புதன்கிழமை ஆறாம் திகதி மீண்டும் அமுல்படுத்தப்படவுள்ளது.

இந்நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை ஆறு மணி முதல் நண்பகல் 12 மணிவரையான 6 மணித்தியாலயத்திற்குள் மாத்திரம் 204 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து 78 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

அதற்கமைய ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு 44 நாட்கள் கடந்துள்ள நிலையில் இக்காலப்பகுதியில் அதற்குப் புறம்பாகச் செயற்பட்டதாக இதுவரையில் 44 ஆயிரத்து 231 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து 11 ஆயிரத்து 460 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. (இ-7)

# மக்களுக்கு அவசியமான பாதுகாப்பு உதவிகளை அரசு வழங்க வேண்டும்

## கரு ஜெயசூரிய வலியுறுத்து



(கொழும்பு)

நாட்டில் ஊரடங்குச்சட்டம் மேலும் நீடிக்கப்பட்டுள்ள நிலையில், சாதாரண வறிய மக்களுக்கு அவசியமான பாதுகாப்பு உதவிகளை வழங்க அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய வலியுறுத்தினார்.

இதுகுறித்து அவர் தனது டுவிட்டர் பக்கத்தில்

நாட்டில் ஊரடங்கு நிலைமை மேலும் நீடிக்கப்பட்டிருக்கிறது. இதனூடாக கொவிட் - 19 கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலைக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகின்றமை தெளிவாகின்றது.

எனினும் சாதாரண வறிய மக்களின் அன்றாட வாழ்க்கையும் இயல்பாக நடைபெறுவதை உறுதிசெய்ய வேண்டியுள்ளது. தொடர்ச்சியாக ஏழாவது வாரமாகவும் நாம் ஊரடங்கு உத்தரவிற்கு உட்பட்டுள்ளோம். இக்காலப்பகுதியில் அதிக தேவையுடைய, வறிய மக்களுக்கு அரசாங்கத்திடமிருந்து பாதுகாப்பு, உதவிகள் தேவைப்படுகின்றன. அதற்கேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என மேலும் குறிப்பிட்டார். (இ-7)

# ஊடக சுதந்திர குறிகாட்டியில் இலங்கை 127 ஆவது இடத்தில்

(கொழும்பு)

2020 ஆம் ஆண்டு உலக ஊடக சுதந்திர குறிகாட்டியில் 180 நாடுகளில் இலங்கை 127 ஆவது இடம்பிடித்தது.

எனினும் கடந்த ஆண்டைவிட ஒரு இடம் பின்தள்ளப்பட்டிருக்கிறது. அத்தோடு கடந்த ஆண்டை விட 2.33 மதிப்பெண்களை அதிகமாகப் பெற்று 41.94 உலகளாவிய மதிப்பெண்ணை இலங்கை பெற்றுக் கொண்டது.

2013 ஆம் ஆண்டு முதல் உலக ஊடக சுதந்திர குறிகாட்டியில் இலங்கை பின்தங்கிய நிலையிலிருந்து முன்னேறி வந்திருக்கிறது.

அதற்கமைய இலங்கை 2013 ஆம் ஆண்டு 162 ஆவது இடத்தையும், 2014 ஆம் ஆண்டு 165 ஆவது இடத்தையும் , 2015 ஆம் ஆண்டும் அதே இடத்தையும், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டு 141 ஆவது இடத்தையும் , 2018 ஆம் ஆண்டு 131 ஆவது இடத்தையும் கடந்த ஆண்டு 126 ஆவது இடத்தையும் பெற்றுக் கொண்டது.

இந்த உலக ஊடக குறிகாட்டியில் முதல் மூன்று இடங்களை முறையே நோர்வே , பின்லாந்து மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகள் பெற்றுக் கொண்டன.

அதேபோன்று எரித்திரியா, துர்க்மெனிஸ்தான் மற்றும் வடகொரியா ஆகிய நாடுகள் முறையே 178 , 179 மற்றும் 180 என்ற இறுதி மூன்று இடங்களில் உள்ளன. (இ-7)

# இரத்தினபுரியில் எலிக்காய்ச்சல்! 5 மாதங்களில் 281 பேர் பாதிப்பு

(இரத்தினபுரி)

இரத்தினபுரி மாவட்டத்தில், எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாக, இரத்தினபுரி மாவட்ட தொற்றுநோய் பிரிவு எச்சரித்துள்ளது.

இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில், இம் மாவட்டத்தில் 281 பேர் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டனர் என்று, இரத்தினபுரி மாவட்ட தொற்றுநோய் பிரிவின் பணிப்பாளர் லக்மால் கோனார தெரிவித்தார்.

2019 ஆம் ஆண்டில், இம் மாவட்டத்தில் 747 பேர் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டனர் என்றும் அவர்களில் 12 பேர் உயிரிழந்தனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்டத்தின் எல்பான, குருவிட்ட, எஹலியகொட, பெல்மடுல்ல, இரத்தினபுரி ஆகிய சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளிலும் இரத்தினபுரி மாநகர சபைக்கு உட்பட்ட சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளிலுமே எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

வயற் செய்கைகளில் ஈடுபடுபவர்கள், தேங்கி நிற்கும் நீர் நிலைகளை மையமாக வைத்து பயிர்ச்செய்கையில் ஈடுபடுபவர்கள், காடுகளில் பயிற்சிகளில் ஈடுபடும் முப்படை வீரர்கள் உள்ளிட்டவர்களே, எலிக்காய்ச்சலால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர் என்றும் அந்தப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன், மாணவர்கள், ஆசிரியர்கள், பொலிஸார் உள்ளிட்டவர்களும் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்நோயானது ஒருவரிலிருந்து ஒருவருக்குத் தொற்றாது என்றும் கால்களில் ஏற்படும் காயங்களுக்கூடாக, எலிக்காய்ச்சலை ஏற்படுத்தும் பக்றீரியாக்கள் உடலுக்குள் ஊடுருவுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஜ)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## அந்த ஐந்து பேர்!

இந்த நபர் மாதிரி இந்த உலகத்திலே வேறு யாரையும் பார்க்க முடியாது சேர். இவர் கோடியிலே ஒருத்தர் சேர்! அப்படியென்று சிலபேரை அறிமுகப்படுத்துவதுண்டு. அப்படியென்றால் என்ன அர்த்தம்? அந்த நபர் அபூர்வமான ஆசாமி என்று அர்த்தம். அருமையிலும் அருமையானவர்கள் என்று அர்த்தம். இந்த உலகத்திலே அருமையிலும் அருமையானவர்கள் ஐந்து பேர் உண்டு என்கிறார் ஒரு பெரியவர் (வாரியார் சுவாமிகள்).

யார் அந்த ஐந்து பேர்? தன்னுடைய பொருளின் கெடுதியையும் கூறும் வியாபாரி , புகழை விரும்பாத கொடையாளி, மாற்றை குறைத்துச் சொல்லாமல் பொன் வாங்குகின்ற வணிகர், எந்தவித இலஞ்சமும் வாங்காத உத்தியோகத்தர், தண்டனையை நியாயமென்று ஒப்புக் கொள்கின்ற குற்றவாளி!

இந்த ஐந்து பேரும் அருமையிலும் அருமையானவர்கள் அப்படியில்லையா? தன்னுடைய பொருளின் கெடுதியைக் கூறும் வியாபாரி யாராவது உண்டா? உளுத்தம் பருப்பு ஒரு கிலோ கொடுங்கள் என்று கேட்கிறீர்கள் "வேண்டாம் சேர் எங்கள் கடையிலே இருக்கின்ற உளுத்தம் பருப்பு மகா மட்டம்! எதிரிலே ஒருத்தன் கடை வைத்திருக்கின்றான். அவர் கடையிலே இருக்கின்றது அற்புதமான பொருள். அங்கே போய் வாங்குங்கள்!" அப்படி என்று யாராவது சொல்லுவார்களா? சொன்னால் அந்த நபருக்கு புத்தி சரியில்லை என்று நினைப்போம்! அதை மாதிரித்தான்.

புகழை விரும்பாத கொடையாளி! இந்தக் காலத்திலே கொடையாளி ஆவதே புகழ் தானே! இடது கை கொடுப்பது வலது கைக்குத் தெரியக் கூடாது என்பார்கள். ஆனால் இன்றைக்கு எதைக் கொடுத்தாலும் இரண்டு கையாலையுமே சேர்த்துக் கொடுத்துத்தான் படம் பிடிக்கின்றோம். இடது கை வாங்குகின்றது வலது கைக்குத் தெரியக் கூடாது என்று வேண்டுமானால் சொல்லலாம். அது இந்தக் காலத்திற்கு பொருத்தமாகவா இருக்கும்.

மூன்றாவது அபூர்வமான ஆசாமி... மாற்றை குறைத்து சொல்லாமல் பொன் வாங்குகிறவர். கூட்டிச் சொல்லி வாங்கினால் அவர் நிலைமை என்ன ஆகிறது?

அடுத்தபடியாக உள்ள அபூர்வமானவர் யாரென்றால் எந்தவித இலஞ்சமும் வாங்காத உத்தியோகத்தர்! உத்தியோகஸ்தர் என்றாலே அதற்கு எம்விளக்கம் என்ன தெரியுமா? இலஞ்சம் வாங்குவதற்கு பல உத்திகளை தெரிந்து வைத்திருப்பவர்... அதனாலேயே அவர் யோகஸ்தர்! அது தான் உத்தி-யோகஸ்தர்!

அப்படியாகிவிட்டது காலம். என்ன செய்வது! இன்று உலகத்திலே இலஞ்சம் வாங்காமல் கூட எப்படியாவது இருந்து விடலாம். ஆனால் இலஞ்சம் கொடுக்காமல் யாரும் காலம் தள்ள முடியாது போல இருக்கே இலஞ்சம் கொடுப்பதென்றாலும் வாங்குவதானாலும் சரி அதற்கு இந்தக்காலத்திலே சிபாரிசு வேண்டிருக்கே சேர். அருமையிலும் அருமையானவர்களே! ஐந்தாவது ஆசாமி யார் தெரியுமா?

தண்டனையை நியாயமென்று ஒத்துக் கொள்கின்ற குற்றவாளி! எனக்கு நீதிமன்றத்திலே பத்து வருடம் கடும் காவல் தண்டனை என்று தீர்ப்புச் சொன்னார்கள் சேர். அது மிகவும் நியாயமான தண்டனை தான்! அந்தத் தண்டனையை கொடுத்த நீதிபதி எனக்குத் தெய்வம் மாதிரி. இந்தத் தண்டனை அவர் எனக்குப் போட்ட பிச்சை அப்படி என்று சொல்லிக் கொண்டு இருப்பான்.

இப்படி எல்லாம் ஆட்களைப் பார்ப்பது மிகவும் கடினம். அப்படி யாராவது எங்காவது கண்ணிலே பட்டால் அவர்கள் அருமையிலும் அருமையானவர்கள் தான். அதிலே சந்தேகமில்லை.

ஒருத்தர் ஒரு மிகவும் கௌரவமான உத்தியோகத்திலே இருந்து கொண்டு இலஞ்சம் வாங்கினார். "ஏன் சேர் இவ்வளவு கௌரவமான உத்தியோகத்திலே இருந்து கொண்டு இலஞ்சம் வாங்குகிறீர்களே...இது தப்பியில்லையா?" என்று கேட்டேன் அவரிடம்.

"இதிலே தப்பிருப்பதாக நான் நினைக்கவில்லை சேர். ஏன் என்றால் இந்தக் கௌரவமான உத்தியோகத்தையே இலஞ்சம் கொடுத்துத் தான் சேர் வாங்கி இருக்கின்றேன்!" அப்படி என்றார் அவர்.

தன்னைப் பற்றி நினைப்பவனுக்கு நரக வாழ்வு;
மற்றவனைப் பற்றி நினைப்பவனுக்கு
சொர்க்க வாழ்வு. - ரமணர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வடக்கு மாகாணத்தை நோக்கிய தனிமைப்படுத்தல் எதற்கானது?

கொரோனா தொற்றுக்குப் பின்பாக, தமிழ் அரசியல்வாதிகளில் பலர் மௌனம் காக்கின்றனர் போல் தெரிகிறது.

சற்று ஆற அமர இருந்து எங்கே இவர்கள் என்று நமக்குள் கேள்வி எழுப்பும் போது கால சூழல்களும் நம் அரசியலைத் தீர்மானிக்கிறதோ என்று எண்ணத் தோன்றும்.

எது எவ்வாறாயினும் இன்றைய எம் தமிழினத்துக்காக நாம் அனைவரும் ஒன்றுபட்டு ஒருமித்துக் குரல் கொடுக்க வேண்டும் என்பதை மட்டுமே இப்போதைக்குக் கூற முடியும்.

அதிலும் ஆளுந்தரப்பு அல்லது தேசியக் கட்சிகளுடன் சேர்ந்திருக்கின்ற தமிழ் அரசியல்வாதிகள் குரல் கொடுப்பதற்கான சந்தர்ப்பமாக இன்றைய சூழ்நிலை அமைந்துள்ளது.

ஆம், கொரோனா தொற்று உலகம் முழுவதையும் ஆட்டிப் படைத்த வண்ணமுள்ளது. இதில் இலங்கைத் தீவும் விதிவிலக்கல்ல.

இலங்கையைப் பொறுத்தவரை கொரோனாத் தொற்று என்பதை மாவட்ட ரீதியாக நோக்கும்போது 21 மாவட்டங்களில் கொரோனா கட்டுப்பாட்டில் உள்ளது என்பதைக் கூற முடியும்.

அதிலும் யாழ்ப்பாண மாவட்டம் கொரோனாத் தொற்றை எதிர்கொண்டு அதனை முறியடித்து வெற்றி கண்டது.

இது விடயத்தில் மருத்துவ சமூகமும் இதர உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் வழங்கிய ஒத்துழைப்பு போற்றுதலுக்குரியது.

நிலைமை இதுவாக இருக்கையில், தனிமைப்படுத்தல் முகாம்களை அமைப்பதில் வடக்கு மாகாணத்தைத் தெரிவு செய்வதானது எந்த வகையிலும் பொருத்தப்பாடானதாக இல்லை.

சுவிஸ் போதகரால் யாழ்ப்பாணத்தில் கொரோனா பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்ற தகவல் கிடைத்ததும் சம்பந்தப்பட்ட தரப்புகள் உடனடியாகக் களத்தில் இறங்கி எடுத்த அதிரடி நடவடிக்கைகள் யாழ்ப்பாண மண்ணில் கொரோனாத் தொற்றுப் பரவுவதை தடுத்து நிறுத்தியது.

இந்நிலையில் இலங்கையின் பிற மாகாணங்களைச் சேர்ந்த - கொரோனாத் தொற்று ஏற்படலாம் என்ற ஐயப்பாடு உடையவர்களை வட மாகாணத்துக்கு அழைத்து வந்து அவர்களை இங்கு தங்க வைப்பதென்பது அடிப்படை நியாயமற்ற செயல் என்பதுடன் வடக்கில் தமிழர்கள் வாழ்வதனால் இத்தகைய செயல்கள் நடக்கின்றனவோ என்று எண்ணுகின்ற சூழமைவையும் ஏற்படுத்தி நிற்கிறது.

வடக்கில் தனிமைப்படுத்தல் முகாம்களை அமைப்பதற்கு முன்னதாக இங்குள்ள சுகாதாரத் திணைக்களத்தின், மருத்துவ அதிகாரிகளின் ஆலோசனைகளைப் பெற்றிருக்க வேண்டும்.

ஆனால் இவை எதுவும் நடக்காமல், தனிமைப்படுத்தல் முகாம்களை வடக்கில் அமைத்து, கொரோனா தொற்றுக்கு ஆளாகக் கூடியவர்கள் எனச் சந்தேகிக்கப்படுவோரை இங்கு அழைத்து வரும் போது, வட பகுதியும் அபாயமான வலயமாக ஆக்கப்படுகிறது.

எனவே இது விடயத்தில் இனியேனும் அரசு கவனம் செலுத்த வேண்டும்.

# நாட்டு மக்களுக்கு ஆசி வேண்டி ஜனாதிபதி சமயக் கிரியைகளில் பங்கேற்பு

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டுக்கும் மக்களுக்கும் ஆசி வேண்டி நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் அநுராதபுரத்தில் உள்ள வரலாற்று முக்கியத்துவமிக்க ஜயஸ்ரீ மகா போதியில் இடம்பெற்ற சமயக் கிரியைகளில் பங்கேற்றிருந்தார். அநுராதபுரம் புனித பூமிக்கு சென்றிருந்த ஜனாதிபதி அடமஸ்தானாதிபதி கலாநிதி சங்கைக்குரிய பல்லேகம ஸ்ரீநிவாச நாயக்க தேரரை சந்தித்து ஆசிகளை பெற்றுக்கொண்டார்.

ருவன்வெலி மகா சேய வளாகத்தில் இடம்பெற்ற பூஜையிலும் கலந்துகொண்ட ஜனாதிபதி சமயக் கிரியைகளில் ஈடுபட்டு நாட்டுக்கும் மக்களுக்கும் ஆசி வேண்டி பிரார்த்தித்தார். அங்கு விசேட பிரித் பாராயண நிகழ்வொன்றும் இடம பெற்றது. ருவன்வெலிசாய விகாராதிபதி சங்கைக்குரிய பல்லேகம ஹேமரத்ன நாயக தேரரை சந்தித்த ஜனாதிபதி தேரருடன் சுமுகமாக கலந்துரையாடினார். மிரிசவெடிய ரஜமகா விகாரைக்கு சென்ற ஜனாதிபதி அவ்விகாரையின ஈதலவெடுனுவெள ஞானதிலக நாயக தேரரையும் சந்தித்தார். கொரோனா ஒழிப்புக்கு அரசாங்கம் முன்னெடுத்த நிகழ்ச்சித்திட்டம் பற்றி ஜனாதிபதி தேரருக்கு விளக்கினார். அந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு அனைத்து மகா சங்கத்தினரதும் ஆசிகள் உள்ளதாக தேரர் குறிப்பிட்டார். (ஐ)

# டெங்கு நோய் தொடர்பாகவும் அவதானம் வேண்டும்

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

(கொழும்பு)

வரவிருக்கும் தென்மேற்கு பருவமழை காலத்தில் டெங்கு நோயாளிகளின் அதிகரிப்பு தொடர்பாகவும் நாடு தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சு எசசரித்துள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்த சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியராச்சி "முழு நாட்டின் கவனமும் இப்போது கொரோனா வைரஸ் தொற்று நோய்களில் உள்ளது. எவ்வாறாயினும், வரவிருக்கும் டெங்கு காய்ச்சலுக்கு நாங்கள் தயாராக இருக்க வேண்டும்.

எதிர்வரும் நாட்களில், டெங்குவை ஒழிப்பதற்கும், நுளம்பு இனப்பெருக்கம் செய்யக்கூடிய இடங்களை ஆய்வு செய்வதற்கும் ஒரு திட்டம் செயற்படுத்தப்படும்" என தெரிவித்தார்.

மேலும் மழைக்காலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை நாங்கள் எடுக்காவிட்டால், சுகாதார அமைச்சு இரட்டைச் சுமையைச் சுமக்க வேண்டியிருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடு முழுவதிலும் இந்த ஆண்டு ஜனவரியில் இருந்து அதிக எண்ணிக்கையிலான டெங்கு நோயாளிகள் சுமார் 11,595 பேர் பதிவாகியுள்ளனர்.

ஆயினும்கூட, எண்ணிக்கை குறைந்து வருகிறது. ஏப்ரல் மாதத்தில், நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் குறைந்த மழைப்பொழிவு காரணமாக 383 டெங்கு நோயாளிகள் மட்டுமே பதிவாகியுள்ளனர்.

இருப்பினும், தற்போது நடைமுறையில் உள்ள ஊரடங்கு உத்தரவு காரணமாக பெரும்பாலான நிறுவனங்கள் வெறிச்சோடி காணப்படுவதால், நுளம்பு இனப்பெருக்கம் செய்யும் எண்ணிக்கையும் அதிகரிக்க சாத்தியக்கூறுகள் உள்ளன என்று அமைச்சர் சுட்டிக் காட்டினார். (ஐ)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** நாவற்குழி, கோகிலாக்கண்டி, தச்சன்தோப்பு, மறவன்புலவு, தனங்கிளப்பு, அறுகுவெளி, லிங்ரெடி மிக்ஸ் பிறைவேற் லிமிற்றெட், அராலிப் பிரதேசம், செட்டியார் மடச் சந்தி, கரம்பிட்டி பிள்ளையார் ஆலயம், அராலி ஐயனார் கோவிலடி, அராலி கொலனி, அராலி சரஸ்வதி பாடசாலை ஆகிய இடங்களிலும்,

**வவுனியா பிரதேசத்தில** துட்டுவாகை, முகத்தான்குளம் 2ஆவது பண்ணை, இலுப்பைக்குளம் ஆகிய பிரதேசங்களிலும்,

நாளை செவ்வாய்க்கிழமை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**கிளிநொச்சி பிரதேசத்தில்** புதுக்குடியிருப்பு நகரம், சிவநகர், மந்துவில், ஆனந்தபுரம், மல்லிகைத்தீவு, வலைஞர்மடம், புதுமாத்தளன் ஆகிய இடங்களிலும்,

**வவுனியா பிரதேசத்தில்** துட்டுவாகை, முகத்தான்குளம்2ஆவதுபண்ணை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

# 17 இலட்சம் பயனாளிகளுக்கு மேல் ஐந்தாயிரம் ரூபாய் கொடுப்பனவு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று பாதிப்பை அடுத்து 17 இலட்சத்து 48 ஆயிரத்து 20 பேருக்கு 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்கப்பட்டதாக சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்த சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பந்துல திலகசிறி, கொடுப்பனவுகளை வழங்குவதற்காக 8.05 பில்லியன் ரூபாய்க்கும் அதிகமாக செலவு செய்யப்பட்டுள்ளது எனக் கூறினார்.


2இலட்சத்து 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சமுர்த்தி பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் ஈட்டும் குடும்பங்களுக்கு 5 ஆயிரம் வழங்க 12.62 பில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

அத்தோடு கொடுப்பனவு வழங்குவதற்காக மற்றொரு தரப்பும் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்தார்.

5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவுக்காக மேலும் பலர் விண்ணப்பித்துள்ளதாகவும் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ-2-4)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## அருட்காப்பு- ஒரு விளக்கம்



"அருட்பேராற்றல் இரவும் பகலும், எல்லா நேரங்களிலும், எல்லா இடங்களிலும், எல்லாத் தொழில்களிலும், உறுதுணையாகவும், பாதுகாப்பாகவும், வழிநடத்துவதாகவும் அமையுமாக" என்பது அருள்காப்பு அதன் விளக்கம் பின்வருமாறு:-

அருட்பேராற்றல் எங்கும் நிறைந்ததாக இருந்தாலும், அது ஓரிடத்தில் தேங்கியும், அந்த இடத்தை விட்டு விலகாமலும் இருக்க, அத்தூய காந்த ஆற்றல் பாதுகாப்பு வளையமாக அமையட்டும் என்று எண்ணத்தால் அருட்காப்பு கொடுத்து, பயன்களை அடைவது பலர் அனுபவத்தில் கண்டு, கையாளும் வழக்கம் ஆகும்.

எந்த நோக்கத்தைச் சேர்த்து இந்தக் காப்பைக் கொடுக்கிறோமோ அதற்கேற்ற பயன் விளையும். நாம் எடுத்த காரியத்தில் முயற்சியையும், வெற்றியையும் அது கூட்டுவிக்கும். இதனால் உயிர் ஆற்றலின் விரயம் தடுக்கப்படுகிறது. சக்திப் பெருகிக் கொண்டே போகிறது. நாம் எடுத்துக் கொண்டுள்ள நோக்கம் தடங்கலின்றி நிறைவேறுகிறது.

இரவில் படுக்கப் போகும் போது இந்த அருட்காப்பை நம்மைச் சுற்றிலும், நம் வீட்டைச் சுற்றிலும் போட்டுக் கொள்ளலாம். தூக்கத்தின் போது நமக்கோ, இல்லத்திற்கோ எந்தத் தீங்கும் ஏற்படாது.

வாகனங்களில் பயணம் செய்கின்றபோது இந்தக் காப்பை அந்த வாகனத்தைச் சுற்றிலும் போட்டுக் கொண்டால், விபத்தில்லாமல் பயணம் நடைபெறும். பயணம் மேற்கொள்ள இருக்கின்ற உறவினர்களுக்கோ, நண்பர்களுக்கோ, அவர்கள் விடை பெறுகின்றபோது அவர்களைச் சுற்றிலும் அருட்காப்புப் போட்டு அனுப்பலாம். நலமுடன் ஊர் போய்ச் சேர்வார்கள்.

பெரியவர்களாக இருந்தால் மௌனமாக அருட்காப்பைச் சொல்வது நலம். சிறியவர்களாக இருந்தால் நேரிடையாக்ச் சொல்லி அனுப்பி வைக்கலாம். இன்னும் எத்தனையோ விதங்களில் இந்த அருட்காப்பை உணர்வாளர்கள் பயன்படுத்திப் பலன் காணலாம்.இதைத் தனக்குத் தானேயும் போட்டுக் கொள்ளலாம்.

புகழுக்காகவோ, பணத்திற்காகவோ இவ்வருட்காப்பினை மற்றவர்க்கு அளிக்கக் கூடாது. உயிர்க்கு உதவியாக, ஒரு கருணைச் செயலாக உள்ளம் உவந்து அருட்காப்பிட வேண்டும்.

# கொரியா எல்லையில் குண்டுமழை பொழிந்த வடகொரியா

## தென்கொரியாவும் பதிலடி



(பியாங்யாங்)

வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன் 20 நாட்களுக்குப்பின் பொதுவெளியில் தோன்றிய நிலையில், கொரிய எல்லையில் குண்டுமழை பொழிந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

வடகொரியாவுக்கும், தென்கொரியாவுக்கும் இடையிலான நட்புணர்வு பெரும்பாலும் நன்றாக இருந்ததில்லை.

வடகொரியா அவ்வப்போது ஏவுகணை சோதனை நடத்தும் போது தென்கொரியா அமெரிக்காவுடன் இணைந்து இராணுவ கூட்டுப்பயிற்சியில் ஈடுபட்டு, எல்லையில் இராணுவ விமானங்களை பறக்க விட்டு வடகொரியாவை அச்சுறுத்தும்.

ஆனால் கடந்த ஓராண்டுகளுக்கு மேலாக இரு நாடுகளுக்கும் இடையில் மிகப்பெரிய அளவில் அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டதில்லை. இரு நாட்டு ஜனாதிபதிகளும் பேச்சுவார்த்தையில் கூட ஈடுபட்டனர்.

இந்நிலையில் நேற்று கொரிய எல்லையில் வடகொரியா வீரர்கள் குண்டுமழை பொழிந்தனர்.

துப்பாக்கியாலும், சிறிய வகை பீரங்கியாலும் தாக்கியதாக கூறப்படுகிறது.

இதைச்சற்றும் எதிர்பார்க்காத வடகொரியா, பதில் தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்தத் தாக்குதலில் உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படவில்லை என தென்கொரியா தெரிவித்துள்ளது.

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் கடந்த 20 நாட்களுக்கு மேலாக எந்த நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ளாமல் இருந்தார்.

அறுவைச்சிகிச்சை செய்து கொண்டதால் உடல்நிலை மோசமாக உள்ளதாக தகவல் வெளியானது. அந்த நிலையில்தான் நேற்று முன்தினம் பொதுவெளியில் தோன்றி வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

அவர் பொதுவெளியில் தோன்றிய அடுத்த நாளில் வடகொரியா இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2-4)

# உளவு பார்த்த குற்றச்சாட்டு; ராணுவ அதிகாரிகள் பணிநீக்கம்

## கொலம்பியாவின் பாதுகாப்பு அமைச்சகம் அதிரடி

(பொகோடா)

கொலம்பியாவின் பாதுகாப்பு அமைச்சகம் 11 இராணுவ அதிகாரிகளை கடந்த வெள்ளிக்கிழமை முதல் பணி நீக்கம் செய்துள்ளது.

ஊடகவியலாளர்கள், அரசியல்வாதிகள், நீதவான் மற்றும் இராணுவத்தின் தகவல்களை உளவு பார்த்த குற்றச்சாட்டுக்கு அமைவாகவே இவர்களை கொலம்பிய பாதுகாப்பு அமைச்சகம் பணி நீக்கம் செய்துள்ளது.

அத்துடன் இந்த உளவு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் ஜெனரல் ஒருவர் தாமாக முன் வந்து தனது பதவியை இராஜினாமா செய்தார். இவ்வாறு பணி நீக்கம் செய்யப்பட்ட இராணுவ அதிகாரிகள் மற்றும் ஜெனரலின் பெயர்களை பாதுகாப்பு அமைச்சகம் வெளியிடவில்லை.

கொலம்பியாவின் 'Semana' என்ற செய்தி இதழானது உளவு குற்றச்சாட்டுக்களை வெளியிட்டதன் பின்னர் கொலம்பிய நாட்டின் சட்டமா அதிபர் இது தொடர்பான விசாரணைகளை கடந்த ஜனவரி மாதம் ஆரம்பித்தார்.

கொலம்பியாவின் புரட்சிகர ஆயுதப்படையான 'FARC' யின் இரகசிய தகவல்கள், அண்மைய ஆண்டுகளில் இராணுவம் சம்பந்தப்பட்ட விடயங்கள் ஹக் செய்யப்பட்டமை, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் உட்பட 130 க்கும் மேற்பட்டவர்களின் கணக்குகள்ஹேக் செய்யப்பட்டுள்ளமை, அத்துடன் அவர்களது குடும்பங்கள் மற்றும் முகவரிகள் உள்ளிட்ட தகவல்களும் ஹக் செய்யப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# கொரோனா வைரஸ் தாக்கம்; பிரான்ஸில் அவசரநிலை நீடிப்பு

(பாரிஸ்)

கொரோனா வைரஸ் காரணமாக பிரான்ஸில் ஜூலை 24 ஆம் திகதி வரை அவசரநிலை நீட்டிக்கப்பட்டுள்ளது.

உலகையே உலுக்கி வரும் கொரோனா வைரஸ் 210 நாடுகளுக்கு பரவியுள்ளது. இந்தக் கொடிய வைரஸின் தாக்கத்தால் பெரும் மனித உயிரிழப்புகள் ஏற்பட்டு வருகிறது.

உலகம் முழுவதும் 34 இலட்சத்து 26 ஆயிரத்து 413 பேருக்கு வைரஸ் பரவியுள்ளது.

வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை 2 இலட்சத்து 40 ஆயிரத்து 497 பேர் பலியாகியுள்ளனர்.

சீனாவில் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த வைரஸ் தற்போது ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் கோரத்தாண்டவம் ஆடி வருகிறது.

ஐரோப்பிய நாடான பிரான்ஸில் ஒரு இலட்சத்து 67 ஆயிரத்து 346 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும், வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை 24 ஆயிரத்து 594 பேர் உயிரிழந்துள்ளனர். வைரஸ் தாக்கம் தீவிரமடைந்த நாள் முதல் அங்கு அவசர நிலை அமுலில் உள்ளது.

இந்நிலையில், கொரோனாவின் தீவிரம் இன்னும் குறையாத நிலையில் நாடு முழுவதும் அமுலிலுள்ள அவசரநிலை ஜூலை மாதம் 24ஆம் திகதி வரை நீடிக்க பிரான்ஸ் அரசு உத்தரவிட்டுள்ளது. (ஜ-2-4)

# சிறையில் கலவரம்; 17 கைதிகள் மரணம்



(கராகஸ்)

வெனிசுவெலாவின், குவானாரே சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரத்தில் குறைந்தது 17 கைதிகள் உயிரிழந்ததாக அந்நாட்டு இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஏ.எப்.பி.செய்தி நிறுவனத்தால் மேற்கோள் காட்டப்பட்ட வெனிசுவெலாவின் இராணுவ அறிக்கையில்,

வெனிசுவெலாவின் குவானாரேயினல் உள்ள லாஸ் லானோஸ் சிறைச்சாலையில் கைதிகளிடத்தில் பொது ஒழுங்கானது சீர்குலைந்தமையால் இந்தக் கலவரம் ஏற்பட்டுள்ளது.

இதன் விளைவாக 17 சிறைக் கைதிகள் உயிரிழந்துள்ளதுடன், 9 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தக் கலவரத்துக்கு இராணுவம் எந்தக் காரணமும் தெரிவிக்கவில்லை.

எனினும் கைதிகளின் உரிமைக் குழுவினர், கைதிகளுக்கு அவர்களின் உறவினர்கள் உணவு கொண்டு வருவதற்கு தடை விதித்ததன் காரணமாகவே இந்தக் கலவரம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

கொரோனா வைரஸ் பரவலின் தடுப்பு முயற்சியின் ஒரு கட்டமாகவே இவ்வாறு சிறைச்சாலைக்கு வெளியிலிருந்து பொருட்கள் கொண்டு செல்வது தடை செய்யப்பட்டுள்ளது.

கைதிகளுக்கான போதுமான தண்ணீர் மற்றும் உணவுகள் இல்லை எனக் கூறியுள்ள வெனிசுவெலா சிறைச்சாலையின் அதிகாரிகள், அவர்களில் பெரும்பாலானோர் ஊட்டச்சத்து குறைபாடு உடையவர்கள் என்றும் காசநோய் கொண்டவர்கள் என்றும் தெரிவித்தனர்.

கலவரத்தின் பின்னர் சிறைச்சாலையின் பிரதான நுழைவாயிலிலிருந்து சிறைக் கைதிகள் வெளியேற முயன்ற போது அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)



# ஆயிரத்து 500 வகையான துப்பாக்கிகளுக்குத் தடை



(ஒட்டாவா)

கனடாவில் தாக்குதல் பாணியிலான துப்பாக்கிப் பாவனைக்கு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தடை விதித்தார்.

கனடாவில் தாக்குதல் பாணியிலான துப்பாக்கிகளுக்கு தடை விதிக்கப்படும் என்று முன்னதாகவே கூறப்பட்டிருந்தது.

இந்நிலையில் கடந்த ஏப்ரல் மாதம் அங்கு இடம்பெற்ற மிக மோசமான துப்பாக்கிப் பிரயோக சம்பவங்களையடுத்தே இந்தத் தடை உத்தரவு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

அதன்படி 1,500 தாக்குதல் பாணியிலான துப்பாக்கிகளை விற்பனை செய்வதற்கும், கொண்டு செல்வதற்கும், இறக்குமதி செய்வதற்கும் மற்றும் வைத்திருப்பதற்கும் தடை விதிக்கப்பட்டதுடன், அவ்வாறு ஈடுபட்டால் அது சட்டவிரோதமாகும் என அந்நாட்டு அரசு தெரிவித்தது.

இதேவேளை இந்தத் துப்பாக்கிகளை ஏற்கனவே வைத்திருக்கும் நபர்களுக்கு தடைக்கு இணங்க அனுமதிக்க இரண்டு ஆண்டுகள் பொது மன்னிப்புக் காலமும் வழங்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி தடை செய்யப்பட்ட துப்பாக்கிகளை வைத்திருப்போருக்கு இழப்பீடு வழங்குவதற்காக சட்டத்தை இயற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ட்ரூடோ சுட்டிக்காட்டினார்.

2017 இல் கியூபெக்கில் உள்ள ஒரு மசூதியில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூடு, 2018 இல் ரொரன்ரோவிலுள்ள வணிகத் தெருவில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூடு என்பன அண்மைய நாட்களில் கனடாவில் பதிவான மிக மோசமான துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களாகும். (ஜ-2-4)

## செட்டிகுளம் பிர...

மரணமடைந்துள்ளதாக செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, செட்டிகுளம், துடரிக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இளம் யுவதி ஒருவரை காணவில்லை என தேடிய போது உறவினர்கள் அவரை வீட்டு கிணற்றில் அவதானித்துள்ளனர்.

இதனை அவதானித்த உறவினர்கள் அயலவர்களின் உதவியுடன் கிணற்றிலிருந்து அவரை மீட்டு, வவுனியா செட்டிகுளம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி குறித்த 21 வயதுடைய பெண் உயிரிழந்துள்ளார்.

பெண் உயிரிழந்தமைக்கான காரணம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை செட்டிகுளம் பொலிஸார் முன்னெடுத்து வருவதுடன் அவரின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா, செட்டிகுளம் பிரதேச சபையில் கடமையாற்றும் திருக்கேதீஸ்வரநாதன் கலைவாணி (வயது-21) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

(ம-3,250,299)

## காணாமல்போன...

17 வயது மாணவன் காணாமற் போயிருந்த நிலையில் 6 நாட்களின் பின்னர் புலோப்பளை கடல்நீரேரியில் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பளை, முள்ளியடியைச் சேர்ந்த ஆர். அனோச் (வயது - 17) என்ற மாணவனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

புலோப்பளை கடல்நீரேரியில் நேற்று பிற்பகல் அவரது சடலம் கண்டறியப்பட்டது.

பளை தர்மக்கேணி அ.த.க பாடசாலையில் பயின்று 2019ஆம் ஆண்டு சாதாரண தர பரீட்சை எழுதி முடிவுக்காக காத்திருந்தவர்.

இந்த நிலையில் மாணவனைக் காணவில்லை என்று கடந்த 28ஆம் திகதி பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. அவர் 6 நாட்களின் பின்னர் கடல்நீரேரியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-3)

## கிணற்றிலிருந்து...

கிழக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கரும்புள்ளியான் பகுதியில் 23 வயதுடைய இளைஞர் ஒருவர் கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்

இந்த சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட நட்டாங்கண்டல் கரும்புள்ளியான் பகுதியில் வசித்து வருகின்ற பிரபாகரன் றொசாந்தன் என்கிற இளைஞன் கடந்த வெள்ளிக்கிழமை தனது வீட்டுக்கு வருகை தந்த நிலையில் அவரை காணவில்லை என்று அவரது உறவினர்கள் தேடியபோது அவர் கிணற்றில் உயிரிழந்த நிலையில் சடலமாக காணப்பட்டுள்ளார்

குறித்த இளைஞன் சிறு வயதிலேயே தன்னுடைய தந்தை தாயாரை இழந்த நிலையில் தன்னுடைய அம்மம்மா, அம்மப்பா ஆகியோருடன் வாழ்ந்து வந்த நிலையில் வெள்ளிக்கிழமை வெளியில் சென்று வீடு திரும்பிய நிலையில் அவரை காணவில்லை என உறவினர்கள் தேடிய போது நேற்றுக் காலை அவர்கள் கிணற்றிலிருந்து நீர் எடுப்பதற்காக சென்றபோது கிணற்றினுள உடலம் மிதப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்துள்ளனர்

இதனைத் தொடர்ந்து பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்துக்கு வருகை தந்த மாங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த சம்பவத்தில் நட்டாங்கண்டல் கரும்புள்ளியான் பகுதியைச் சேர்ந்த பிரபாகரன் றொசாந்தன் என்ற 23 வயது இளைஞனே இவ்வாறு உயிரிழந்தவராவார். (ம-3,281)

## ஐ.தே.கவும்...

ராஜபக்ஷ இன்று அலரி மாளிகைக்கு வருமாறு அழைப்பு விடுத்த கூட்டத்தில் கலந்து கொள்வதில்லையென ஐ.தே.க அறிவித்துள்ளது.

இந்த கூட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி, ஜேவிபி ஆகியன கலந்து கொள்ளாது என ஏற்கெனவே அறிவித்துள்ளன.

எதிர்க்கட்சிகள் தரப்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பு மாத்திரம் கலந்து கொள்வதென அறிவித்துள்ளது.

ஐ.தே.க ஆரம்பத்தில் இந்த கூட்டத்தில் கலந்து கொள்ளுமென அறிவித்திருந்த போதும், தற்போது கூட்டத்தில் கலந்து கொள்வதில்லையென அறிவித்துள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் கூட்டத்தில் கலந்து கொள்வதில்லையென முடிவெடுத்ததாக தெரிவித்துள்ளது.

இதேவேளை தற்போது கலைக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மேலதிகமாக 2010இல் பாராளுமன்றத்துக்கு தெரிவானவர்களும் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டுள்ளார்கள். (ம-3)

## மிருசுவில் மன்...

இதில் மிருசுவில் பகுதியைச் சேர்ந்த 40 வயதான ஒரு பிள்ளையின் தந்தையான சிவகுமார்என்பவர்வெட்டுக்காயங்களுடன்சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

வாள்வெட்டில் காயமடைந்த மேலும் இருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதுடன், ஒருவர் சிறு காயங்களுடன் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையிலும் சிகிச்சை பெற்று வருகிறார்.

வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். ஊரடங்கு வேளையில் இவ் வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3,18,30,114)

## ஊரடங்கு நடை...

களில எந்தவொரு கட்டுப்பாடுகளும் இல்லை"

இவ்வாறு ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்றிரவு வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

மக்களின் தேவையற்ற ஒன்றுகூடலைக் கட்டுப்படுத்த, ஊரடங்கு உத்தரவு விதிக்கப்படும்போது மட்டுமே அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டையின் இறுதி எண் பொறிமுறை நடைமுறைப்படுத்தப்படும்.

ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்படும்போது வீட்டை விட்டு வெளியேறுவதற்கு இது எந்த வகையிலும் பொருந்தாது.

ஒரு குறிப்பிட்ட பகுதி அல்லது கிராமம் ஆபத்து வலயமாக அறிவிக்கப்பட்டால், அத்தகைய பகுதிகளுக்குள் நுழையவோ வெளியேறவோ யாரும் அனுமதிக்கப்படுவதில்லை என்றுள்ளது. (ம-3)

## ஊரடங்கு இன்று...

திங்கட்கிழமை காலை 5.00 மணி முதல் தளர்த்தப்படுகிறது.

இந்த மாவட்டங்களில், மீண்டும் இன்று திங்கட்கிழமை முதல் புதன்கிழமை வரை இரவு 8.00 மணிக்கு அமுல்படுத்தப்பட்டு, அதிகாலை 5.00 மணிக்கு ஊரடங்கு தளர்த்தப்படும்.

புதன்கிழமை இரவு 8.00 மணிக்கு அமுலாகும் ஊரடங்கானது எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 5.00 மணி வரை நடைமுறையில் இருக்கும்.

வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் ஊரடங்கு தொடர்ந்து அமுலில் இருக்கும்.

அதேவேளை கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் புத்தளம் ஆகிய நான்கு மாவட்டங்களில் தற்போது அமுலில் இருக்கும் ஊரடங்கு சட்டமானது எதிர்வரும் 11ஆம் திகதி வரை தொடர்ந்தும் அமுலில் இருக்கும்.

எனினும், மாவட்டங்களிற்கிடையிலான பயணங்கள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும். (ம-3)

## திட்டமிட்ட திகதி...

நீதிமன்றம் தடைவிதிக்காவிடின் திட்டமிட்டவாறு ஜூன் மாதம் 20ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தலை நடத்த தேர்தல்கள் ஆணைக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் கொரோனா வைரஸின் தாக்கத்தையடுத்து பாராளுமன்றத் தேர்தலை தேர்தல்கள் ஆணைக்குழு ஒத்தி வைத்தது.

தேர்தலை ஒத்திவைக்கும் போது ஜூன் மாதம் 20ஆம் திகதி தேர்தல் இடம்பெறும் என தேர்தல்கள் ஆணைக்குழு அதிவிசேட வர்த்தமானி மூலம் அறிவித்திருந்தது.

எனவே, பாராளுமன்றத் தேர்தலை திட்டமிட்ட திகதியில் தேர்தல்கள் ஆணைக்குழு நடத்தியே ஆக வேண்டும். அதற்குரிய சகல அதிகாரங்களும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு இருக்கின்றது.

கொரோனா வைரஸ் தாக்கத்தையோ அல்லது பழைய பாராளுமன்றத்தை மீளக் கூட்டுமாறு கோரும் யோசனையையோ அல்லது அரசமைப்பைக் காரணம் காட்டி வர்த்தமானி அறிவித்தல் விடயத்தையோ அல்லது வேட்புமனுத் தாக்கல் விவகாரத்தையோ காரணம் காட்டி பாராளுமன்றத் தேர்தலைக் குழப்பியடிக்கும் வகையில் யாராவது வழக்குத் தொடுத்தால் அதற்குரிய பதிலை நீதிமன்றத்துக்கு நான் வழங்குவேன் என்றும் தெரிவித்துள்ளார். (ம-3)

## நிதியை கையா...

தெரிவித்துள்ளார்.

நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தின் மேற்பார்வை இல்லாமல், கொரோனா வைரஸ் எதிர்ப்பு பிரசாரத்திற்காக ஒதுக்கப்பட்ட வெளிநாட்டு நிதியை அரசாங்கம் தவறாகப் பயன்படுத்தும் என்பது எதிர்க் கட்சியின் குற்றச்சாட்டுக்களில் ஒன்று என்பதை சுட்டிக் காட்டியுள்ள ராஜபக்ஷ, அத்தகைய நிதியைச் செலவிடுவதில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் உள்ளன என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் புதிய பாராளுமன்றம் கூடியவுடன், எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தின் செலவீனங்கள் குறித்து கேள்விகளை எழுப்ப முடியும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

"ஜனாதிபதி, அரசாங்கம் மற்றும் அரச இயந்திரங்கள் யாவும் கொரோனா எதிர்ப்பில தமது முழு கவனத்தையும் செலுத்தியுள்ளன. இதன் மூலம் மக்கள் பயனடைந்துள்ளனர்.

இந்த தேசிய நெருக்கடி மற்றும் உலகளாவிய பேரழிவின் மத்தியிலும் கூட, இந்த நாட்டில் அரசியல் எதிர்ப்பின் விரும்பத்தகாத கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

பழைய பாராளுமன்றத்தின் ஒப்புதல் இல்லாமல் அரசாங்க சேவைகளை பராமரித்தல், பாராளுமன்றம் மீண்டும் கூட்டப்படாது போனால் ஜனாதிபதியும் அரசாங்கத்தில் உள்ள அனைவரும் குடியுரிமையை இழப்பர் என்றும் அவர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும் என்றும் சிலர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நாட்டில் கொரோனா வைரஸ் நோயாளிகள் இல்லாதபோது மார்ச் மாத தொடக்கத்தில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது.

முதல் கொரோனா வைரஸ் நோயாளி ஒன்றரை வாரங்களுக்குப் பிறகு கண்டுபிடிக்கப்பட்ட பின்னர், தேர்தல் ஆணைக்குழு தேர்தலை ஜூன் 20ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தது.

மருத்துவ அதிகாரிகளின் ஆலோசனையைப் பொறுத்து தேர்தலை மேலும் ஒத்தி வைக்கலாம் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு ஏற்கெனவே அறிவித்துள்ளது.

எனவே தேர்தல்கள் ஆணைக்குழு தங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு ஏற்ப தேர்தலை பொருத்தமான நேரத்தில் நடத்தும்.

இந்நிலையில் இலங்கையில் கொரோனா வைரஸ் எதிர்ப்பு நடவடிக்கை மற்ற நாடுகளை விட மிகச் சிறந்த முடிவுகளைக் காட்டிய சூழ்நிலையில் தேர்தல் நடத்தப்பட்டால், அது அரசியல் ரீதியாக தமக்கு கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும் என்பதே எதிர்க் கட்சிகளின் கவலையாக உள்ளது என்று மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எனவேதான் எதிர்க்கட்சிகள் பழைய பாராளுமன்றத்தை கூட்டுமாறு கோருகின்றன. பழைய பாராளுமன்றம் கூட்டப்பட்டால், அரசாங்க நிதிகளைத் தடுத்து அதன் மூலம் கொரோனா வைரஸ் எதிர்ப்பு நடவடிக்கையை நாசமாக்கி தேர்தலுக்கு முன்னர் அரசாங்கத்தை இழிவுபடுத்துவ்தே எதிர்க் கட்சிகளின் நோக்கமாகும் என்று மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முன்னைய அரசாங்கம் ஏப்ரல் 30ஆம் திகதி வரை கணக்கு மீதான வாக்கெடுப்பை நிறைவேற்றியதாகவும், எனவே இந்த திகதிக்கு பின்னர் எந்தவொரு நோக்கத்திற்காகவும் நிதி ஒதுக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் இல்லை என்று எதிர்க்கட்சிகள் கூறுகின்றன.

இது ஒரு அபத்தமான வாதம். அரசியலமைப்பின் 150 (3) வது பிரிவின் கீழ், எந்தவொரு நோக்கத்திற்காகவும் பாராளுமன்றத்தால் ஒதுக்கப்படாத நிதியை ஒதுக்க ஜனாதிபதிக்கு முழு அதிகாரம் உள்ளது என்று மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ம-3)

## மகிந்தவின்...

அலரி மாளிகைக் கூட்டத்தைப் புறக்கணித்துள்ளோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது,

பிரதமர், அலரி மாளிகையில் விசேட கூட்டத்தைக் கூட்டி ஊடகக் கண்காட்சியை நடத்த முற்படுகின்றார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அரசுடன் இணைந்து பயணிக்கின்றார்கள் என்று உள்நாட்டுக்கும் வெளியுலகத்துக்கும் அவர் படம் காட்டத் திட்டமிடுகின்றார்.

இதுக்கெல்லாம் எம்மால் வளைந்து கொடுக்க முடியாது. எமது யோசனைகளை நிராகரித்து விட்டு பழைய பாராளுமன்றத்தைக் கூட்டவே மாட்டேன் என்று ஜனாதிபதி திட்டவட்டமாக அறிவித்துவிட்டார்.

எனினும், அதை எதிர்த்து நாம் நீதிமன்றம் சென்றிடுவோம் என்ற பயத்தில் ஜனாதிபதியும் பிரதமரும் இருக்கின்றனர்.

இந்நிலையில் எம்மைச் சமாளிக்கவே அலரி மாளிகைக் கூட்டத்தை முற்கூட்டியே பிரதமர் ஏற்பாடு செய்துள்ளார். எனினும், நாம் நீதிமன்றம் சென்று நீதியைப் பெறுவதில் உறுதியாக இருக்கின்றோம் என்றும் தெரிவித்துள்ளார். (ம-3)

## பொதுத் தேர்...

கிணங்க இதில் பங்கேற்க விரும்புபவர்கள் சமுகமளிக்கலாம். கூட்டத்தைப் புறக்கணிக்க விரும்புபவர்கள் புறக்கணிக்கலாம். இது தொடர்பில் எனக்கு எந்த 'ஆட்சேபனையும் இல்லை என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தை மீளக்கூட்டுவது தொடர்பில் இந்தக் கூட்டத்தில் கவனம் செலுத்தமாட்டேன். பாராளுமன்றத் தேர்தலை விரைவில் நடத்துவது குறித்தே இங்கு கவனம் செலுத்தப்படும் எனவும் அவர் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். (ம-3)

## 718...

அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொறறால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 718ஆக (ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப் பெண் உட்பட) அதிகரித்துள்ளது. (ம-3)

உயர்தரப் பரீட்சை தொடர்பாக

# மாணவர்களுக்கு நியாயமான தீர்மானம் ஒன்று மேற்கொள்ளப்படும்

## பரீட்சைகள் ஆணையாளர்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன என்பதால், இந்த வருடத்திற்கான உயர் தரப்பரீட்சை தொடர்பாக ஆராய்ந்து தீர்மானம் ஒன்றை எடுப்பதாக பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

அதிகாரிகளும் கல்வியமைச்சும் இணைந்து மாணவர்களுக்காக நியாயமான தீர்மானத்தை எடுப்பார்கள் என அவர் கூறியுள்ளார்.

மே அல்லது ஜூன் மாதத்தில் பாடசாலைகளை மீண்டும் திறக்க முடியாமல் போனால், பாடங்களை பூர்த்தி செய்ய கூடுதலான காலம் தேவை. பாடங்களை முழுமையாக பூர்த்தி செய்தால் மாத்திரமே நியாயமான பரீட்சைகளை நடத்த முடியும்.

இந்த வருடம் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள உயர்தரப் பரீட்சையில் 3 லட்சத்து 64 ஆயிரத்து 761 மாணவர்கள் தோற்ற உள்ளனர் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## இன்று முதல் 5 ஆயிரம் ரூபாய்

(கொழும்பு)

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த முன்னெடுக்கப்பட்ட கட்டுப்பாடுகளால் வாழ்வாதார உழைப்பையிழந்த குடும்பங்களுக்கு அரசால் 5 ஆயிரம் ரூபாய் இடர்கால கொடுப்பனவு மே மாதத்துக்கும் வழங்கப்படும் பணி இன்று தொடக்கம் ஆரம்பிக்கப்படும் என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது. (ம-3)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603 / 021 567 1532

# ரயில், இ.போ.ச வில் பயணம் செய்ய இன்று முதல் புதிய நடைமுறைகள்

(கொழும்பு)

நாட்டில் மக்களின் இயல்பு வாழ்க்கை மீளவும் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் இலங்கை போக்குவரத்து சபை பேருந்து சேவை மற்றும் ரயில்வே திணைக்களத்தின் தொடருந்து சேவைக்கு புதிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் இலங்கை போக்குவரத்து சபை மக்களின் இயல்பு வாழ்க்கை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் பொது போக்குவரத்து சேவைகளை வழங்குவதற்கான புதிய திட்டத்தை வகுத்துள்ளது.

அரச மற்றும் தனியார் துறை அத்தியாவசிய சேவைகளுக்கு என தனியான பேருந்து சேவை இடம்பெறும். அதற்கான சேவைக்கு ஏற்கனவே விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாகபேருந்துகளை வழங்க முடியும் என இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், இன்று முதல் அத்தியாவசிய சேவைகளுக்கு அலுவலகங்களுக்குச் செல்லும் அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கான அனைத்து வழித்தடங்களிலும் தொடருந்து சேவைகள் இடம்பெறும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இருப்பினும், சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தலைவர்களால் விண்ணப்பிக்கப்பட்ட பட்டியலில் குறிப்பிடப்பட்ட ஊழியர்களுக்கு மட்டுமே இந்தச் சேவைகள் வழங்கப்படுகின்றதாகவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இச் சேவைக்காக திணைக்களத் தலைவர்களிடமிருந்து வாரந்தோறும் அனுமதி பெறப்பட வேண்டும் என்றும், ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமைக்கு முன்னர் விண்ணப்பங்கள் நிறுவனத் தலைவர்கள் ஊடாக அனுப்பப்பட வேண்டும்.

அத்துடன் தொடருந்தில் பயணிக்க அனுமதிக்கப்பட்டவர்களுக்கு குறுந்தகவல் (எஸ்.எம்.எஸ்) மூலம் அறிவிக்கப்படும் எனவும் தொடருந்து நிலையத்திற்கு நுழையும் போது, பாதுகாப்புப் படையினருக்கு குறுந்தகவல் காட்டப்பட வேண்டும் என்றும் ரயில்வே திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-3)

# தேர்தல் திகதியை மாற்றும் அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு உண்டு

பெப்ரல் அமைப்பு சுட்டிக்காட்டு

(கொழும்பு)

பொதுத் தேர்தலை எதிர்வரும் ஜூன் 20 ஆம் திகதிக்கு நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டால், அன்றைய தினத்தில் இருந்து 14 நாட்கள் கடந்த பின்னர் மீண்டும் உரிய திகதியை அறிவிக்கும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு இருப்பதாக பெப்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

காணப்படும் நிலைமைக்கு அமைய சுகாதார பாதுகாப்புடன் தேர்தல் நடத்த வேண்டும் என்றபோதிலும் மே 10 ஆம் திகதிக்கு பின்னர் அதற்கு பொருத்தமான சூழல் ஏற்பட்டுள்ளதா என்பதை சுகாதார துறையினர் தீர்மானிக்க வேண்டும்.

அப்படியானசூழல்ஏற்படவில்லை என்றால், ஜூன் 20 ஆம் திகதி தேர்தலை நடத்துவதில் சிக்கல் ஏற்படும். இதனால், அன்றைய தினத்தில் இருந்து 14 நாட்களுக்கு பின்னர் அதாவது ஜூலை 4 ஆம் திகதியின் பின் தேர்தலை நடத்தும் திகதியை அறிவிக்கும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு இருப்பதாக பப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். (ம-3)


**விற்பனைக்கு**

மணல், சல்லி, கண்ட கல்
(அத்திவாரக்கற்கள்), சீமெந்துக் கற்கள்
என்பவற்றை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

T.P : 076 760 3066,
070 159 9046

(C-9557)

# மரண அறிவித்தல்



## வல்லிபுரம் தங்கராசா (தேவன்)

(பிரபல பவுண் அரிப்பாளர்)

ஆரிய குளத்தைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் தங்கராசா (தேவன்) அவர்கள் கடந்த 02.05.2020 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் வல்லிபுரம் பொன்னம்மா தம்பதிகளின் பாசமிகு மகனும், லட்சுமிபிரபா (வேவி) அவர்களின் அன்புக் கணவரும், பவிதரனின் பாசமிகு தந்தையும், சிவாஞ்சலி, சைலா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2020) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12.00 மணியளவில் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இணுவில் வீதி,
1ம் குறுக்கு, மானிப்பாய்.

(2684)

தகவல் :
த.பவிதரன் (மகன்)

**வீட்டிற்கும் வேலைக்கும் வாசற்படியில்**




077 734 0026
021 222 6868

Yarl Pardy

**Virounthu @ Yarl pardy**

யாழ்பாடி

(C-9556)

49-51 அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
Amman Road, Nallur, Jaffna.

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.05.2020 இல் பதிவேற்றம் செய்யப்பட்டது.